# தபால் ஊழியரின் 17 நாள் வேலை நிறுத்தம் முடிந்தது

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 1[illegible]

# ஈழநாடு

EELA NADU

[illegible] : 49 மலர் 9
[illegible] 189 இதழ் 157

National Tamil Daily — தேசிய தினசரி

[illegible] பிலவங்க ஆடி 2 ரபி ஆகி. 9 செவ்வாய்க்கிழமை [18 7-67]

கொழும்பு, திங்கள்

கடந்த பதினேழு தினங்களாக வேலை நிறுத்தத்திலீடுபட்டிருந்த தபால் தரம் பிரிக்கும் ஊழியர்கள் இன்று நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் வேலைக்குத் திரும்பிவிடுவர்.

வேலைநிறுத்தத்திலீடுபட்டிருந்த ஊழியர்கள் இப்போது பகுதி பகுதியாக வேலைக்குப் போய்க் கொண்டிருக்கின்றனர். புதிய விண்ணப்பங்களை போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் ஏற்றுக் கொள்கிறார்.

நேற்றிரவு அரசாங்க லிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் தபால் இலாகாவைச் சேர்ந்த 5 யூனியன் தலைவர்கள் சந்தித்து, வேலை நிறுத்தம் செய்தவர்கள் புதிதாக வேலைக்கு விண்ணப்பிக்க வேண்டுமென்ற நிபந்தனைக் கிணங்க வேலைக்குத் திரும்புவதெனத் தீர்மானித்தனர்.

வேலை நிறுத்தம் செய்த தபால் தரம்பிரிக்கும் ஊழியர்கள் பழிவாங்கப்பட மாட்டார்கள் என்று பிரதமர் நேற்று தம்மைச் சந்தித்திருந்த யூனியன் தலைவர்களிடம் தெரிவித்திருந்தார்.

## உரும்பராய் பட்டினசபை தலைவர் தேர்வு

உரும்பராய், திங்கள்

உரும்பராய் புதிய பட்டின சபையின் தலைவர் தெரிவு வியாழக்கிழமை நடைபெறவிருக்கிறது.

தலைவர் பதவிக்கு முன்னுள் நீர்வேலி கிராமசபைத் தலைவரான திரு கே. குலசிங்கமும் [4-ம் வட்டார அங்கத்தவர்] 2-ம் வட்டாரத்தில் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்ட திரு. வ. நடேசலிங்கமும் போட்டியிடுகிறார்கள்.

# அதிகாரமற்ற மாவட்ட சபைகளை ஒப்புக்கொள்வரா?

## அமெரிக்க 'சர்வேயர்-4' சந்திரனில் இறங்கியது ஆனல் ரேடியோ தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விட்டது

கலிபோர்னியா, ஜூலை 17

அமெரிக்கா அனுப்பிய ஆளில்லாத விண்வெளிக் கலம் 'சர்வேயர்-4' சந்திரனில் இறங்கியுள்ளது. ஆனல் அதில் இணைக்கப்பட்டிருந்த ரேடியோ தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்திரனில் மோதுண்டு சேதத்துடன் இறங்கியதா இல்லையா என்பதுபற்றி அத்த ரேடியோ தொடர்பு அறுந்ததால் அறியமுடியாதிருப்பதாக கலிபோர்னியா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தைச்சேர்ந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சந்திரனிலுள்ள பள்ளங்கள் எரிகற்களால் ஆக்கப்பட்டதா என்பதை அறிவதே இந்த 'சர்வேயர்-4' அனுப்பப்பட்டதன் முக்கிய நோக்கமாகும். சர்வேயர்-4ல் பட்டிருந்த காந்த சக்தி ஒன்று பள்ளத்தைத் தோண்டி எரிகற்கள் இருக்கிறதாஎன்பது பற்றிஆராய்வதற்கு விஞ்ஞானிகள் திட்டமிட்டிருந்தனர். ஆனல் இந்த ரேடியோ தொடர்பு அறுபட்டது, கலிபோர்னியா விஞ்ஞானிகளுக்குப் பெருத்த தலையிடியை ஏற்படுத்தியுள்ளது.

## யாழ். பாடசாலை மாணவர்க்கு விவசாயப் போட்டி

### ரூ. 6,000 பரிசுகள் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பாடசாலைகளிலும் விவசாயப் போட்டி நடாத்துவதென நேற்று நடைபெற்ற போஷாக்கு உணவு உற்பத்தி அதிகரிப்புக்கூட்டத்தில் விசேஷமாகத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் வடபகுதி அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிவாரணநிதி ஸ்தாபனத்தின் பிரநிதியான உணவு, விவசாய அமைப்பாளர் திரு. மக்கின்டொஸ், உணவு உற்பத்தி ஆலோசகர் திரு. லக்ஸ்மன் சில்வா ஆகியோர் விசேஷமாக அழைக்கப்பட்டிருந்தனர்.

பாடசாலைகளில் நடாத்தப்படும் இந்த போஷாக்கு உணவு உற்பத்திப் போட்டிக்கு சுமார 6 ஆயிரம் ரூபா பெறுமதியான பரிசில்களை வழங்க ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிவாரண நிதிஸ்தாபனம் முன்வந்துள்ளது. மேலும் பாடசாலைகளில் பப்பா, மாமரம், நெல்லிபோன்ற மரங்களும் நாட்ட ஆலோசனை வழங்கப்படும். பாடசாலைப் போட்டி சம்பந்தமான பூரண விபரங்களை வடபகுதி வித்தியாதிபதி திருமதி ஆர். நவரத்தினத்திடம் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது

கிராமங்கள் தோறும் உப உணவுப்பொருட்களை உற்பத்தி செய்வது சம்பந்தமாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. திருநெல்வேலியில் ஒரு மத்திய நிலையத்தை அமைத்து வாரத்தில் இரு நாட்கள் இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டங்களை நடாத்தி விரிவுரைகள் நிகழ்த்துவதன் மூலம் அதிக உப உணவு உற்பத்தியை உண்டுபண்ணுவது என முடிவுசெய்யப்பட்டது. இதற்காக ஒவ்வொரு கிராமத்திலும் இளம் விவசாயிகள் கழகங்களையும், மாதர் சங்கங்களையும் அமைத்து குறைந்தது 100 இளைஞர்களையாவது ஒவ்வொரு சங்கத்திலும் அங்கத்தவராகச் சேர்ந்து வீட்டுத்தோட்டங்களையும் அமைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

[ந. நி.]

## சமஷ்டியினர் முட்டாள்கள் அல்ல என்கிறர் கம்யூ. எம். பி.

### "மசோதா வருமுன் முஸ்லிம்களின் ஐயத்தைபிரதமர் நீக்கவேண்டும்"

— முகம்மதலி

கொழும்பு, திங்கள்

**மாவட்டசபைகள் அமைப்பதற்கான மசோதாவைக் கொண்டுவருவதற்கு முன் கிழக்கு மாகாண எம். பி. க்களை குறிப்பாக முஸ்லிம பிரதிநிதிகளைக் கலந்தாலோசிப்பதாக பிரதமர் தமக்குஉறுதியளித்திருக்கிறர் என்றும மாவட்டசபைகள் பற்றி தங்களுக்குள்ள அச்சத்தையும ஐயத்தையும பிரதமர் நீக்கவேண்டுமென்றும மூதூர் முதலாவது எம. பி. ஜனப் எம. ஈ. எச். முகமமதலி இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் கூறினர்.**

மாவட்டசபைகள் இப்பொழுதுள்ள கச்சேரிகளுக்குப் பதிலாகச் செய்யப்படவிருக்கும் பெயர் மாற்றமே யொழிய வேறு ஒன்றும் பெரிய விஷயமல்ல என்று உதவித் தொழில் மந்திரி திரு. எஸ். டி. எஸ். ஜயசிங்கா சொன்னர். இதன்பின் கம்புறுப்பிட்டி எம். பி. திரு. பேர்ஸி விக்கிரமசிங்கா [கம்யூனிஸ்ட்] பேசுகையில், அதிகாரம் ஒன்றுமேயில்லாத மாவட்டசபைகளுக்கு சமஷ்டிக்கட்சியினர் ஒப்புக் கொண்டிருப்பார்களா என்றும் மாவட்டசபைகளுக்கு அதிகாரம் இல்லையெனக் கூறி மக்களை முட்டாள்களாக்க நினைக்கக்கூடாதென்றர்.

ஜனப்பிரதிநிதிகள் சபை இன்று காலை சபாநாயகர் தலைமையில் கூடியபோது சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் தொடர்ந்துநடைபெற்றது. இவ்விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய எம். பி. க்கள் மாவட்டசபைபற்றியே முக்கியமாகக் குறிப்பிட்டனர்.

முன்பு தமிழரசுக்கட்சியில் அங்கம் வகித்தவரான மூதூர் முதல் எம். பி. ஜனுப் எம். ஈ. எச். முகம்மதலி பேசுகையில் குறிப்பிட்டதாவது:

மாவட்டசபைகள் அமைப்பது சம்பந்தமாக சர்ச்சை தோன்றியபோது இதுபற்றி எங்கள் கருத்துக்களையும் தெரிவிப்பதற்கு பிரதமரைச் சந்திக்க விரும்பினேம் அதற்கு ஒரு சந்தர்ப்பம் தருமாறும் பிரதமரைக் கேட்டிருந்தோம். இதற்குப் பிரதமர் எழுதிய பதிலில் மாவட்டசபைகள் அமைப்பதற்கான மசோதாவைப் பார்லிமெண்டில் சமர்ப்பிப்பதற்கு முன்னர், கிழக்கு மாகாண எம். பி. க்களின் குறிப்பாக முஸ்லிம் எம். பி. க்களின் கருத்தைக் கேட்க விருப்பதாகவும் அவர்களின் ஆலோசனையைப் பெறவிருப்பதாகவும் உறுதியளித்திருந்தார்.

மாவட்ட சபைகள் பற்றி கூறப்படும் பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் பொது மக்களைக் குறிப்பாக கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களை பெருங்குழப்பத்தி லாழ்த்தியிருக்கிறது. கிராமசபைகளுக்குள்ள அதிகாரங்களை விட மாவட்டசபைகளுக்கு மிகவும் குறைந்த அதிகாரங்களே இருக்குமென்று மகாநாயகதேரோவுக்குஎழுதிய கடிதத்தில் பிரதமர் தெரிவித்திருந்த போதிலும் மாவட்டசபைகளின் அமைப்பு, அதிகாரங்கள் சம்பந்தமாக எங்களுக்கு ஐயமும் அச்சமும் நீங்கவில்லை. எனவே மாவட்டசபைகள் அமைப்பதற்கான மசோதா சமர்ப்பிக்கப்படுமுன் அவை பற்றி பிரதமா தெளிவு

[4-ம் பக்கம்பார்க்க]

## ரயில்கள் தாமதம்

கொழும்பு, திங்கள்

நேற்றிரவு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற மெயில் ரயில் இன்று பிற்பகலில் தான் கோட்டையை வந்தடைந்தது. தெமட்டகொடை ரயில்வே சந்திக்கருகில் நேற்றிரவு சாமான்கள்ஏற்றிக்கொண்டு போன ரயில் தடம்புரண்டதாலேயே இந்தத் தாமதம் ஏற்பட்டது. கொழும்பிலிருந்து வந்த யாழ்தேவியும் இன்று பிற்பகல் 3-15க்கே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. தெமட்டகொடையில் தற்காலிகமாக ஒருதுணைப்பாதைஇப்போது அமைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு பகுதிகளுக்கும் சென்ற ரயில்கள் தாமதமாகவே சென்றன.

## சிங்கப்பூருக்கு இமையாணன் மண்வெட்டி

இமையாணன், திங்கள்

சிங்கப்பூரில்உள்ள ஒருவருக்கு, இமையாணனின் ஐக்கிய பண்டகசாலைமூலம் ஒரு மண்வெட்டி கிடைத்திருக்கிறது. இமையாணன் ஐக்கிய பண்டகசாலைக்கு ஒரு சில மண்வெட்டிகள் வந்தன. இதனை வழங்குவதற்காக நிர்வாகிகள், சங்க அங்கத்தவர்கள் அனைவருடைய பெயர்களையும் அதிர்ஷ்டலாபச்சீட்டின் மூலம் குலுக்கினர். அதன் பிரகாரம் முன்பு இமையாணனில் வசி

[8-ம பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

ஒப்பரேட்டர்கள்....

யாழ்ப்பாணத்திலுள்ள தியேட்டரொன்றில் கடமையாற்றுவதற்கு இரு ஒப்பரேட்டர்களும், புக்கிங் கிளார்க்குகளும் உடனடியாகத் தேவை. ஒப்பரேட்டர்கள் வேலைக்கு விண்ணப்பிப்பவர்கள் திறமையும் அனுபவம் மிக்கவர்களாகவும் இருக்கவேண்டும். விளம்பர இலக்கம் 2426, ஈழநாடு மே/பா, தபால் பெட்டி எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2426

சமையற்காரர்:

பண்டத்தரிப்பு தியாகருஜ வீதியில் புதிதாக அமைக்கவிருக்கும் ருஜ ஹோட்டலுக்கு [Rajh Hotel] சமையல் வேலையில் அனுபவம்நிறைந்தவர்கள் தேவை. நேரில் வரவும். தியாகருஜா. 2510

### விற்பனைக்கு

தோட்டம்:

80 ஏக்கர் நெல், தென்னை, முந்திரி தோட்டம் ஆனையிறவுக்கருகில் உள்ள இயக்கச்சியில் விற்பனைக்குண்டு. முழுசாகவோ, துண்டுகளாகவோ கொடுக்கலாம். பின்வரும் விலாசத்துக்கு எழுதவும்: ஹவுஸ் அன்ட் புறொப்பெர்டி ட்றேட்ஸ் லிமிட்டெட், த. பெ. இலக்கம் 1077, கொழும்பு. 2427

### வைத்தியம

தொய்வு, சுசம், நீரிழிவு, இரத்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பாலசுப்பிரமணியத்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

வியாபாரம பெருக விளம்பரம்செய்க

## தம்பிரான் சுவாமிகளுக்கு பொன்னுடை

வல்வெட்டித்துறை, திங். வல்வெட்டித்துறை வைத்தீஸ்வரன் கோவிலில் கடந்த 28 தினங்களாக நடந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாததம்பிரான் சுவாமிகளின் சம்பூரணராமாயண விரிவுரை பூர்த்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவின் போது சுவாமி நாதத்தம்பிரான் சுவாமிகளை நெடியகாடு பிள்ளையார் கோவிலடியிலிருந்து அழைத்துவந்து வைத்தீஸ்வரன் கோவில் முன்னிலையில் பொன்னுடை போர்த்திக் கௌரவித்தனர்,

## 9 ஆயுள்வேத ஆஸ்பத்திரிகள்

கொழும்பு, திங்கள்

ஒவ்வொரு மாகாணத்திலும் ஓர் ஆயுள்வேத ஆஸ்பத்திரி அமைப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கட்டப்படவிருக்கும் ஆயுள்வேத ஆஸ்பத்திரிக்கான அடிக்கல்லை சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்தன இம்மாதம் 27-ம் திகதி இங்கு விஜயம் செய்யும் போது நாட்டிவைப்பார்.

## கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரன் தேவஸ்தானத்தில் அருட்கவி திரு. சீ. விநாசித்தம்பி தொடர்ச்சியாக 'இறைவன் திருவிளையாடல்' என்னும் பொருள்பற்றி இம்மாதம் 22-ம் தேதி வரை கதாப்பிரசங்கம் செய்வார். சென்ற 13-ம்தேதியிலிருந்து இவர் பிரசங்கம் நடந்துவருகிறது.

## தெல்லிப்பளையிலும் இரண்டு கிணறு

குரும்பசிட்டி, திங்கள்

கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாண மாவட்டததில் அமைக்கப்படவிருக்கும் பொதுக்கிணறுகளில் இரண்டு, தெல்லிப்பழையைச் சேர்ந்த வீமன்காமம் கிராமத்தில் வெட்டப்படும் எனத் தெரிகிறது.

## ஆஸ்பத்திரி வார்ட்டில்சண்டை

யாழ்ப்பாணம், செவ்வாய்

வார்ட்டில் சுகமில்லாது இருக்கும் தமது உறவினர்களைப் பார்க்க வந்த இரு கோஷ்டியினரிடையே ஏற்பட்ட வாய்ச்சண்டை இறுதியில் கைகலப்பாக மாறியதாம். இச்சண்டை யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரியிலுள்ள வார்ட் ஒன்றில் நேற்று முன்தினம்மாலை நடைபெற்றது.

ஏற்கனவே நடைபெற்ற சண்டையொன்றில் காயமுற்று வார்ட்டில் அனுமதிக்கப்பட்டு இருக்கும் இருவரைப் பார்க்க வந்த இருபக்கத்துக்கோஷ்டியினருக்குமிடையிலேயே இச்சண்டை நடைபெற்றதாகத் தெரியவந்துள்ளது. இக்கைகலப்பில் 'பெல்ட்', சைக்கிள் 'பம்' ஆகியனவும் பாவிக்கப்பட்டனவாம். சம்பந்தப்பட்ட வார்ட் ஊழியர்களால் இதுவிஷயம் ஆஸ்பத்திரி மேலதிகாரிகளுக்கு தெரிவித்து அவர்கள் ஸ்தலத்துக்கு விரைந்து செல்லுமுன் கைகலப்பில் ஈடுபட்ட இருகோஷ்டியினரும் அங்கிருந்து மறைந்துவிட்டனராம். [ந நி]

## "பஸ் சேவையை இப்படி மாற்றுக"

சங்கானை, திங்கள்

பருத்தித்துறையி லிருந்து பண்டத்தரிப்பு, சித்தன்கேணி ஊடாக மூளாய் செல்லும் இ. போ. ச. பஸ் சேவையை சங்கானைக்கு வந்து, திரும்பவும் அதே வழியாக பருத்தித்துறைக்குச் செல்லக்கூடியதாக ஒழுங்குகளைச் செய்யவேண்டுமென்று இ. போ. ச. பிரதேச முகாமையாளரை சங்கானைப் பட்டினசபைத தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் கேட்டுள்ளார்.

இச்சேவையை உடனடியாக ஆரம்பித்தால் மக்கள் நீண்டதூரம் சென்று இரண்டு பஸ்வண்டிகள் எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாதென்றும், தொண்டமானாறு, செல்வச்சந்நிதி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களுக்கு ஆலய வழிபாட்டிற்கு நேரடியாகச் செல்லக்கூடியதாக இருக்குமென்றும் அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
Daily 4-45, 7-00, 9-45
FROM BEIRUT WITH LOVE
With Frederic Stafford As Secret Agent 505

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்.
கே. ஆர். விஜயா
நடித்த
பணம் படைத்தவன்

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
மனோகர் — பண்டரிபாய்
நடித்த
புனிதவதி

REGAL - JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Jane Fonda
in
CIRCLE OF LOVE

## வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

தெல்லிப்பளையிலுள்ள ஒரு சலவைத்தொழிற்சாலை சொந்தக்காரர் மீது துணி வெளுக்க மறுத்ததாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ஜாமீல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மாஜிஸ்திரேட் இவ்வழக்கை நவம்பர் மாதம் 4-ம் தேதிக்கு ஒத்திவைத்தார் [அ.நி]

## இயந்திரப் படகுகள் ஏலவிற்பனை

காங்கேசன்துறை, திங்.

வடபகுதியில்உள்ள அரசாங்கத்துக்குச்சொந்தமான பாவனையற்ற இயந்திரப்படகுகள் மீன்பிடி இலாகாவினால் ஏலவிற்பனை செய்யப்படவிருக்கிறது.

பாவனையாளர்கள் மீன்பிடி இலாகாவிற்கு இயந்திர கோளாறுகள் காரணமாக கொடுக்கப்பட்ட இவ்வியந்திரப்படகுகளை இம்மாத இறுதியில் வடபகுதி மீன்பிடி இலாகா அதிபர் தலைமையில் யாழ்ப்பாணம் காரியாதிகாரி, மற்றும் பலர் கொண்ட குழு ஏலவிற்பனவு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

## 'கிளறிக்கல்' சேவைக்கு 13,000பேர் மனு

கொழும்பு, திங்கள்

அடுத்தமாதம் 25ம்திகதி ஆரம்பமாகும் அரசாங்க லிகிதர் சேவை பரீட்சைக்கு 13 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் தோற்றவிருக்கிறார்கள்.

சென்றவருடம் 54,000 பேர் தோற்றினார்கள். சில புதிய நிபந்தனைகள் காரணமாக இம்முறை சென்ற வருடத்தைவிட குறைவானவர்களே இப் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள்.

## விளம்பரம்

### அறிவித்தல்

பண்ணை உப மின்சார நிலையத்திலுல் பயனடையும் மின் பாவனையாளர்களுக்கு

பண்ணை உப மின் நிலையத்திலும், அங்கு செல்லும் மின் கம்பிகளிலும் வேண்டிய திருத்தங்களை மேற்கொள்ளவேண்டி இருப்பதால், 19-7-67ம் திகதியன்று காலை 7-30 மணி தொடக்கம் நண்பகல் 12-30 மணி வரையும் மின் விநியோகம் தடைப்படுமென யாழ்ப்பாண, அரசாங்க மின்சாரப் பகுதியினர் அறிவித்திருப்பதைப் பொதுமக்கள் கவனத்திற்கு இத்தால் கொண்டுவருகிறேன்

கட்சன் செல்வராசா
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்
யாழ்ப்பாணம். 15

மாட்டுவண்டிலுடன்

## மோதுண்டவர் மரணம்

யாழ்ப்பாணம், செவ்.

மாட்டுவண்டிலுடன் மோதுண்ட ஒருவர் பரிதாபகரமாக மரணமானுர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு வசாவிளானில் நடைபெற்றது.

மரணமானவர் வசாவிளானைச் சேர்ந்த வெள்ளையன் சிங்கம்என்பவராவார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின்னரே மரணமானுர். மரணமானவர் வெளிச்சமில்லாத சைக்கிளொன்றில் வந்தபோது, வண்டிலொன்றுடன் மோதுண்டதாகவும் பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின்னர் மரண

(8ம் பக்கம் பார்க்க)

கும்பாபிஷேக தேவைகளுக்கு
தேவையான
அஷ்டபந்தன மருந்து
* கோவில் அபிஷேகம், திருவிழாக்கள்
* திருமண விழாக்கள்
* புதுமனைப் பிரவேசம்
* புதுமனைக்கு அத்திவாரமிடல்
ஆகிய வைபவங்களுக்குத் தேவைப்படும் அபிஷேகத் திரவியங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, ஜவ்வாது, விளைவுகூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வாசனைதிகள், பன்னீர், அத்தர், நவரத்தினம், பஞ்சலோகம் முதலிய சகல சாமான்களும்
மற்றும்
சந்தனம், குங்குமம், சாந்துப்பொட்டுகள் ஆகியவைகளும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.
* மயில் மார்க் சந்தன வில்லைகள்
* சுகந்த சந்தனப் பவுடர்
நறுமணம் கமழும்
* சந்தனக் குழம்பு
[உடன் யந்திரத்தினுல் அரைத்தது]
எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
[மருந்து, மருந்துச்சரக்கு வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]
53, கே. கே. எஸ். றோட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068

இன்று மட்டும்!
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
மொடேர்ண் [பண்டாரவளை]
ஜெய்சங்கர், ஜெயலலிதா
நாகேஷ், மனோகர்
மாதவி, சகஸ்ரநாமம்,
பண்டரிபாய், ராமதாஸ்
நடிக்கும்
நீ

நாளை முதல்!
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
காமினி
ராஜ் [நீர்கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டக்களப்பு]
ஸ்ரீ கிருஷ்ண [திருமலை]
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
ரி. ஆர். ராமச்சந்திரன் - நாகேஷ்
நடித்த
அன்பே வா
(ஈஸ்ட்மென் கலர்)
இசை:
எம். எஸ். விஸ்வநாதன்
கதை, டைரெக்ஷன்:
ஏ. ஸி. திரிலோகசந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூயஸ் கால்வாயில் ஐ. நா. போர்நிறுத்த கண்காணிப்பு நிலையங்கள் அமைப்பதில் எதிர்பாராததாமதம்

## இஸ்ரேலின் கோரிக்கையும் ஐ. அ. கு. எச்சரிக்கையும்

கெயிரோ, ஜூலை 17

**சூயஸ் கால்வாய் பகுதியில் ஐ நா. போர்நிறுத்தக் கண்காணிப்பு நிலையங்களை அமைப்பதில் எதிர்பாராத விதமான தாமதம் ஏற்பட்டுள்ளது.**

**நேற்று கெயிரோ சென்றுவிட்டு ஜெருசலம் திரும்பிய ஐ.நா. அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.**

ஐ.அ.குடியரசு, இஸ்ரேல் ஆகிய இருதரப்பினருடனும் சில நீக்குப் போக்குப்பேச்சு வார்த்தைகள் நடாத்த வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

### பார்வையாளர்

இதற்கிடையில், ஐ. நா. பார்வையாளர்களில் நான்கு பேர் இஸ்மேலியாவிலும் நான்குபேர் கான்டாராத் துறைமுகத்திலும் நிறுத்தப் பட்டுள்ளனர்.

இஸ்ரேல் துருப்புகளுக்கும் ஐ. அ. குடியரசுத் துருப்புகளுக்குமிடையே போர் நிறுத்த எல்லைக்கோட்டை நிலை நாட்டுவது பற்றியும் ஐ.நா. போர் நிறுத்தக் கமிஷனுக்குப் பிரச்னை ஏற்பட்டுள்ளது.

### இஸ்ரேல் கோரிக்கை

சூயஸ் கால்வாயின் நடுப் பகுதியில் இந்த எல்லைக் கோடு அமையவேண்டுமென்று இஸ்ரேல் கோரியுள்ளது.

அத்துடன், சூயஸ் கால்வாயில் கப்பல் போக்குவரத்துச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டுமென்றும் இஸ்ரேல் கேட்டுக்கொண்டுள்ளது.

### ஐ.அ.கு. எச்சரிக்கை

ஆனல், சூயஸ் கால்வாயில் இஸ்ரேல் கப்பல்போக்குவரத்தில் ஈடுபட்டால், அந் நடவடிக்கை போர்நிறுத்தத்தை மீறியதாகக் கருதப் படுமென்றும், அதற்கெதிராக ஐ அ.குடியரசு பலாத்காரம் பிரயோகிக்கவேண்டியிருக்குமென்றும் ஐ. அ. கு. இஸ்ரேலை எச்சரித்துள்ளது.

### அரபுக் குடும்பங்கள் திரும்புகின்றன

இஸ்ரேல் பிடித்துள்ள பகுதியிலிருந்து தாயகம் திரும்பும் 50 அரபுக்குடும்பங்களில் முதற்பகுதியினா நாளை ஜோர்டான் ஆற்றின் மேற்குக் கரையை வந்தடைவர் என இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

## இந்திய அரங்கு சிறந்தது

மொண்ட்ரீஸ், ஜூலை 18

கனடாவில் மொண்ட்ரீஸில் நடைபெறும் சர்வதேசப் பொருட்காட்சியான எக்ஸ்போ—27ல் சிறந்த 5 அரங்குகளில் இந்திய அரங்கும் ஒன்ருக இடம்பெற்றுள்ளது.

ஃ ஃ ஃ

## இந்திய பள்ளிக்கூட கிரிக்கெட் கோஷ்டி இங்கிலாந்து சென்றது

புதுடில்லி, ஜூலை 17

பதினறு அங்கத்தவர்களைக்கொண்ட பள்ளிக்கூடக் கிரிக்கெட் கோஷ்டி ஒன்று நேற்று பம்பாயிலிருந்து லண்டனுக்குப் புறப் பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குப் பள்ளிக்கூட மாணவர் கோஷ்டியொன்று செல்வது இதுவே முதற்தடவையாகும்.

---

## மாத்திரைகள் நோட்டாக மாறின

எர்ணுகுளம், ஜூலை 17

அமெரிக்காவில் வசிக்கும் மகள், தனது தாய்க்குப் பார்சல் ஒன்று அனுப்பினுள். உறையின் மீது "20,000 மாத்திரைகள்". என்று எழுதப்பட்டிருந்தது'

வெலிங்டன் தீவு அந்நிய அஞ்சல் அலுவலகத்தில் சுங்க அதிகாரிகள் பார்சலைத் திறந்து பார்த்தனர். கத்தையாக ரூ. 20,000 மதிப்புள்ள இந்திய நோட்டுகள் இருந்தன. முகவரி உள்ள வீட்டில் சோதனையிட்டனர். இதே போல மகள் முன்பு 500 மாத்திரைகள் அனுப்பியதாகக் கண்டு பிடித்தனர்.

---

## தினேஷ்சிங் - இந்திரா சந்திப்பு

புதுடில்லி, ஜூலை 17

கெயிரோவிலிருந்து புதுடில்லி திரும்பியுள்ள இந்திய வர்த்தக மந்திரி திரு. தினேஷ்சிங் நேற்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியை சந்தித்துப் பேசினுர்.

தாம் ஐ. அ. கு. ஜனதிபதி நாஸருடன் நடாத்திய பேச்சவார்த்தைகளின் விபரங்களைத் திரு. தினேஷ்சிங் திருமதி இந்திராவுக்குவிளக்கினுர்.

---

## மகாநாடு

லண்டன், ஜூலை 17

நாற்பத்தைந்து நாடுகளிலிருந்து 1,000 விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் லண்டனில் ஒரு மகாநாட்டில் கூடியுள்ளனர்.

---

இடத்திலுள்ள அந்நியகுடும்பங்களை அகற்றும் ஒழுங்குகளில் சமஷ்டி அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

## நக்ஸல்பாரியில் பொலிசார் தீவிர நடவடிக்கை

### கலகக்காரர் மறைவிடங்களில் சீன துண்டுப்பிரசுரங்கள்

கல்கத்தா, ஜூலை 17

தீவிரவாதிகளின் வன்முறைச் செயல்களை அடுத்து அண்மையில் நக்ஸல்பாரிக்கு அனுப்பப்பட்ட மேற்கு வங்காளப் பொலீசார, அங்கு கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் படிப்படியாக நிறுவியுள்ளனர்.

கிளர்ச்சிக்காரர்களின் பிரதான தளங்கள் பொலிசாா முற்றுகைக் குள்ளாகின. 300 க்கு மேற்பட்ட தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்,

### மா சே துங் படங்கள்

தீவிரவாதிகளின் மறைவிடங்களில் கைப்பற்றப் பட்ட தஸ்தாவேஜுகளில், சீன வெளியீடுகள், துண்டுப் பிரசுரங்கள், மா சே துங் முழு உருவப்படங்கள் ஆகியனவும் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

தீவிரவாதிகளின் கிளர்ச்சிகளின் போது இடம்பெயர்ந்த குடும்பங்கள் இப்போது மீண்டும் தமது இல்லங்களுக்குத் திரும்ப ஆரம்பித்துள்ளன.

நக்ஸல்பாரிக்கு விஜயம் செய்த சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ஜே ஷி, நிலச்சுவாந்தார்களின் கொடுமையே அங்கு நடைபெற்ற கிளர்ச்சிக்காரரின் நடவடிக்கைகளுக்கு முக்கிய காரணமென்ற பொதுவான நம்பிக்கையை மறுத்திருக்கிருர். இந்த நம்பிக்கை, உண்மையான காரணங்களிலிருந்து மக்களைத்திசை திருப்புவதற்காக அவர்களிடம் பரவ விடப்பட்டுள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டிலிருந்து வரும் செய்திகள்

## திராவிட கழக பிரமுகர் கொலையில் 7 பேருக்கு தூக்கு

நாகப்பட்டினம், ஜூலை 17

திராவிடக் கழகத்தைச் சேர்ந்த பஞ்சாயத்து தலைவர் ஒருவரைப் படுகொலை செய்த குற்றத்துக்காக 7 பேர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

பஞ்சாயத்து தேர்தல் விரோதம் காரணமாக இக்கொலை நடந்தது.

தஞ்சை மாவட்டம் திருவாரூர் அருகே உள்ள பழையவலம் என்ற கிராமத்தில் கடந்த ஜனவரி மாதம் 5-ம் திகதி இக்கொலைநிகழ்ந்தது.

கொலை செய்யப்பட்டவர் பழையவலம் பஞ்சாயத்துத் தலைவரான திரு. எம் கிருஷ்ணமூர்த்தி ஆவார். நாற்பது வயதான இவர். திராவிட கழகத்தைச் சேர்ந்த பிரமுகராவார்.

ஃ ஃ ஃ

## வேலூர் விபத்தில் மூவர் பலி

வேலூர், ஜூலை 17

வேலூரில் வண்டி நிலையத்தின் சுவர் இடிந்து விழுந்ததன் விளைவாக ஒரு ஜவானின் மனைவியும், அவரது இரு குழந்தைகளும் மாண்டனர்.

ஃ ஃ ஃ

## சாக்கடை நீக்கும் திட்டம்

சென்னை, ஜூலை 17

கோடம்பாக்கம்— தியாகராயநகர் பகுதிகளில் கழிவு நீர் அகற்றும் விரிவான திட்டத்திற்கு தமிழக அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும், வேலை நடைபெற்று வருவதாயும் சுகாதார மந்திரி திரு. சாதிக் பாட்சா சென்னை சட்டசபையில் அறிவித்தார்.

ஃ ஃ ஃ

## பழனிமலைக்கு மற்றெரு மின்சார தொங்கு வண்டி

பழனி, ஜூலை 17

பழனிமலை மேல் இருக்கும் ஆலயத்துக்கு யாத்திரிகர்களை ஏற்றிச்செல்வதற்காக இரண்டாவது மின்சார தொங்குவண்டி இவ்வாண்டு கடைசிக்குள் தயாராகிவிடும் என்று ஆலய நிர்வாக அதிகாரி திரு. கே. கே. மேனன் தெரிவித்துள்ளார்.

ஃ ஃ ஃ

## சென்னையில் உலக பொருட்காட்சி

சென்னை, ஜூலை 17

சென்னை அருகே நடைபெறவிருக்கும் உலக வர்த்தகப் பொருட்காட்சியை நிறுவுவதற்காக இதுவரை சென்னை அரசு ஒன்றரைக் கோடி ரூபாய் செலவிட்டுள்ளது. இன்னும் ஒன்றரைக் கோடிரூபாய் செலவிடப்பட வேண்டும். இத்தொகை மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது. இவ்விபரங்களைக் கல்வி, தொழில்மந்திரி திரு நெடுஞ்செழியன் அறிவித்தார்.

ஃ ஃ ஃ

## ரயிலில் அடிபட்டு சிறுவன் மரணம்

சென்னை, ஜூலை 17

ரயிலில் அடிபட்டு ஒரு சிறுவன் பரிதாப மரணம் அடைந்தான். இச்சம்பவம் சென்னையில் நடந்தது.

சென்னை யானைக்கவுனி அருகில் மலபார் மெயில் ரயில் வந்துகொண்டிருந்த போது, 14 வயது மதிக்கத்தக்க சிறுவன் தண்டவாளத்தைக் கடந்து சென்ருன். அப்போது, அவன் தவறி விழுந்துவிட்டான். அவன் மீது ரயில் ஏறிவிட்டது.

தலைதுண்டாகி அதேஇடத்தில் மரணம் அடைந்தான்.

ஃ ஃ ஃ

## ரயிலில் விழுந்து தற்கொலை

சென்னை, ஜூலை 17

சென்னை யானைக்கவுனி பாலம் அருகே கன்னையா [வயது45] என்ற பழைய ரயில்வே போட்டர் ரயில் முன்பாய்ந்து தற்கொலை செய்துகொண்டார். வயிற்று வலியாலும் சயரோகத்தினுலும் அவர் நீண்டகாலமாக அவதிப்பட்டுவந்தார்

## கொங்கோ அதிபர் மொபுட்டு நாஸரிடம் மன்னிப்பு கோரினுர்

பிரசவில், ஜூலை 17

கொங்கோலிய ஜனதிபதி திரு. மொபுட்டு, ஐ அ. குடியரசு ஜனதிபதி நாஸரிடமிருந்து மன்னிப்புக் கோரியுள்ளார்.

அண்மையில் ஐ. நா. பொதுச்சபையில், அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் துருப்புகள் வாபஸாக வேண்டுமென்று மண்டல சார்பற்ற நாடுகள் கொண்டுவந்த தீர்மானத்தின்மீதான வாக்கெடுப்பில் கொங்கோலியத் தூதுவர் நடந்துகொண்ட விதத்துக்காகவே ஜெனரல் மொபுட்டு நாஸரிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

கொங்கோலியப் பிரதிநிதி இத்தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தார். அவர் அவ்விதம் வாக்களித்தது அவருக்குக் கொங்கோ அரசாங்கம் பணித்திருந்தமைக்கு மாருனது என்றும், அவர் இப்போது ஐ. நா.விலிருந்து திருப்பி அழைக்கப்பட்டுள்ளாரென்றும் ஜெனரல் மொபுட்டு நாஸருக்கு அறிவித்துள்ளார்.

அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் துருப்புகளை வாபஸ் செய்யும்படிகோரும் மண்டலசார்பற்ற நாடுகளின் தீர்மானத்துக்கான தமது ஆதரவையும் மொபுட்டு வலியுறுத்தியுள்ளார்.

## கி.நைஜீரியதலைநகருக்கருகே சமஷ்டித் துருப்புகள் துரிதமாக முன்னேறுகின்றன

லாகோஸ், ஜூலை 17

சமஷ்டி நைஜீரியாவிலிருந்து பிரிந்து சென்ற 'பியாவ்ரா' என அழைக்கப்படும் கிழக்கு நைஜீரியாவின் தலைநகரான எனூக்கை நோக்கிச் சமஷ்டித துருப்புகள் இருமுனைகளில் முன்னேறிச் செல்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரிவினை இயக்கத்தின் பிறப்பிடம் எனக் கருதப்படும் கிழக்கு நைஜீரியப்பல்கலைக்கழகப் பட்டினமாகிய சுக்கா, இரு தினங்களுக்கு முன் சமஷ்டித் துருப்புகளின் கைகளில் விழுந்தது.

### தலைநகரை நெருங்குகின்றன

கடைசியாக வரும் செய்திகள் சமஷ்டித் துருப்புகள் கிழக்கு நைஜீரியத் தலைநகரான எனூக்குக்குச் சுமார் 54 மைல் தொலைவில் உள்ளதாக அறிவிக்கின்றன.

சண்டை நடைபெறும்

## 600 க்கும் அதிகமானேர் ஹொங்கொங்கில் கைது

ஹொங்கொங், ஜூலை 17

ஹொங்கொங்கில் பொலிசாரும் இராணுவமும் சேர்ந்து எடுத்த நடவடிக்கைகளில் 600க்கும் மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று இங்கு நடைபெற்ற சம்பவங்களின் போது, 3பேர் கொலை செய்யப்பட்டனர். மற்றும் 12 பேர் காயத்துக்குள்ளாகினர்.

ஹொங்கொங்கில் சீனப் பத்திரிகை நிருபர்கள் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்துச் சீனா ஹொங்கொங்கிலுள்ள பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சமாதானம் அல்லது அமைதியின் ரகசியம் முதற்கண் நம் உள்ளத்திலும் அடுத்தபடி நம் குடும்பத்திலும் தான் தங்கியுள்ளது. அவ்வித அமைதியைக் கண்டவர்களே உலகின் குடும்ப சமாதானத்தை ஏற்படுத்த நம்பிக்கையுடன் முற்படக்கூடும்.

—பிராவ்க் புர்டன்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389,

...பிலவங்க ஆடி 2உ (18-7-67)


## வீண் செலவு

கவனக்குறைவு காரணமாக வருடத்தில்பத்து லட்சம் ரூபாய் அரசாங்கத்துக்கு வீண் விரயமாகிறது என்றும் இந்த நஷ்டத்தைத் தடுப்பதற்கான வழிவகைகளைதிட்ட அமுல் குழு ஆராய்ந்து வருவதாகவும் திட்ட அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. அரசாங்க இலாகாக்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் உள்ளவர்களின் கவனக்குறைவும் பொறுப்பற்ற தன்மையுமே வருடாவருடம் பத்து லட்சம் ரூபாய் வீணுவதற்குக் காரணமாம். பத்துலட்சம்ரூபாய் வருடாவருடம் நஷ்டமேற்படுகிறதென்பதை திட்ட அமைச்சு கண்டுபிடித்திருப்பதே பெரிய காரியம். இந்த நஷ்டத்தைத் தடுப்பதிலும் அது வெற்றிபெற வேண்டும்.

அரசாங்க இலாகாக்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் ஏற்படும் வீண் செலவுகள் பற்றி ஆராய்ந்ததில் மின்சாரத்தில் அதிக செலவு ஏற்படுவதாகவும் காரியாலய நேரத்தின் பின்னரும் பல இடங்களிலும் மின்சார விளக்குகள் எரிந்து கொண்டிருப்பது உண்டென்றும் தெரியவந்துள்ளதாம். இது தவிர காரியாலய சேவைக்கென மோட்டார் வாகனங்களுக்கு வழங்கப்படும் பெட்ரோல், டயர் ஆகியவை தனிப்பட்ட சொந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுவதும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாம். அரசாங்க இலாகாக்களில் ஏற்படும் அநாவசியமான தாமதமும் வீண் செலவுகளுக்கு ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.

அரசாங்க காரியாலயங்களில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் 'சிவப்பு நாடா' முறைதான் வீண் தாமதங்களுக்கும் வீண் செலவுகளுக்கும் முக்கிய காரணமென்பதை இப்போதைய அமைச்சர்கள் பலரும் முன்னைய அமைச்சர்கள் சிலரும்கூட வெளிவெளியாகக் கூறிவந்திருக்கின்றனர். எனினும் 'சிவப்புநாடா' முறையில் இன்னும் மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. எதற்கும் ஒரு கட்டுப்பாடும் அவசியம்தான். ஆனால் கட்டுப்பாடு, காரியங்கள் நடைபெறுவதற்கு இடையூறாக இருக்கக்கூடாது.

ஓர் அரசாங்க காரியாலயத்தில் உள்ள பழைய, புதிய தஸ்தாவேஜுகளை அங்கு குடிபுகுந்த சில எலிகள் நாசமாக்கிவருவதாகக் கண்டுபிடிக்கப்பட்டு எலிப்பொறி ஒன்று வேண்டுமென அக்காரியாலய 'பியோன்' ஒரு யோசனை தெரிவித்தாராம். அந்த யோசனையை அங்குள்ள தஸ்தாவேஜுகளுக்குப் பொறுப்பான குமாஸ்தா எழுத்துமூலம் பிரதம குமாஸ்தாவுக்குத் தெரிவிக்க அவர் இரண்டு தினங்களின்பின் தமது அலுவலகத் தலைவருக்கு குறிப்புடன் சமர்ப்பிக்க, அவர் மேலும் இரண்டு மூன்று தினங்களின் பின் பெரிய அதிகாரிக்குக் குறிப்புடன் சமர்ப்பிக்க, இரண்டு மூன்று வாரங்களின்பின் திறைசேரியிலிருந்து எத்தனை எலிகள்? எத்தனை எலிப்பொறி? எப்படியான எலிப்பொறி வேண்டும் என்ற கேள்விகளுடன் மீண்டும் ஒவ்வொரு அதிகாரிமூலமாக முதலில் எழுத்துமூலம் எலிப்பொறி யோசனை தெரிவித்த குமாஸ்தாவிடம் வந்து சேர்ந்ததாம். இதற்குள் தஸ்தாவேஜுகள் அனைத்தும் எலிகளினால் நாசமாக்கப்பட்டு விட்டனவாம்.

'சிவப்புநாடா' முறையைக் கிண்டல் செய்வதற்காக யாரோ ஒருவர் கூறிய கற்பனைச் சம்பவம் தான் இது. ஆனாலும் இப்படித்தான் அரசாங்க இலாகாக்களில் அலுவல்கள் ஆறஅமர ஆமைவேகத்தில் நடைபெறுகிறதென்பது உண்மை

அரசாங்க இலாகாக்களில் உள்ளவர்களின் அசமந்தப் போக்கு அரசாங்கத்துக்கு மட்டுமல்லாது பொதுமக்களுக்கும் வீண் கஷ்டங்களையும் நஷ்டத்தையும் ஏற்படுத்துகிறது. ஊழியர் சேமலாபநிதியில் அங்கத்துவம் பெற்றிருந்த ஒருவர் உரிய வயது வந்தபின்னர் தமது கணக்கிலுள்ள 274 ரூபாயைத் திரும்பப் பெறுவதற்காக மனுச் செய்ததிலும் முத்திரைச் செலவிலுமாக நூற்றி ஐம்பது ரூபாய் செலவு செய்தும் தமக்குரிய தொகையை இன்னும் பெறவில்லையாம்.

நாட்டுப்பற்றும் மக்களின் ஊழியர்கள் என்ற மனப்பான்மையும்கடமை உணர்ச்சியும் சிறிய உத்தியோகத்தர் முதல் பெரிய அதிகாரிகள்வரை இருந்தால் வீண் செலவுகளுக்கு இடமிருக்காது. நிர்வாகமும் சிறப்பாக நடைபெறும்.

## பொன்னாலை பனம் பொருள்

சழிபுரம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 27ம்திகதி தொடக்கம் நடைபெறவிருக்கும் கைத்தொழில்கமத்தொழில் பொருட்காட்சியில் பார்வைக்காக பனைமரத்திலிருந்துகிடைக்கும்சகலபொருள்களும் வைக்கப்படவிருக்கிறது. இப்பொருள்களை சேகரிப்பதில் பொன்னாலை- நச்லியான் கிராமத்தைச் சேர்ந்த மலேயன் பென்சனர் திரு. எஸ். சின்னப்பு அதிகம் ஈடுபட்டுள்ளார். பனம் பழத்தில் இருந்து செய்யப்பட்ட பலகாரங்கள், ஜாம், கள்ளு, கருப்பனீர், நுங்கு கல்லாகாரம் ஒடியல், அவித்த ஒடியல், மா, ஓலை, ஈர்க்கு நார் மட்டை, ஓலையால் உருவாக்கப்பட்ட பொருள்கள் மற்றும் பனைமரத்தில் செய்யப்பட்ட பொருள்கள் எல்லாம் பார்வைக்காக வைக்கப்படும். வலிமேற்கு விவசாயப்போதனாசிரியர் திரு. எஸ். சின்னப்பு வேண்டிய ஒத்துழைப்பைக் கொடுத்து பொருள்களைச்சேர்த்து வருகின்றார். பொன்னாலைப் பகுதியில் விழும் பனம்பழங்கள் இப்போதுபக்குவமாகப் பாதுகாக்கப்படுகின்றன.

# 'சினிமாமெட்டுகளில்பாடுவது மரபைஏளனம் செய்வதாகும்'

### பரிசளிப்பு விழாவில் தம்பிரான் சுவாமிகள்

குரும்பசிட்டி, திங்கள்

''தேவார திருமுறைகளை அவற்றிற்குக் குறிக்கப்பட்ட பண்களிலேயே பாடுதல் வேண்டும். இக்கால சினிமா மெட்டுக்களில் அமைத்துப் பாடுவது தொன்றுதொட்டு வந்த ஒரு மரபை ஏளனம் செய்வதாகும். தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனைகளை குறிப்பிட்ட இராகங்களில் அன்றி மாறறிப்பாடுதல் பிழையானதென்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். எனவே திருமுறைகளையும் பண் மாற்றிப் பாடுவதை எவரும் அனுமதிக்கக்கூடாது.''

இவ்வாறு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் கட்டுவன் இந்துசமயவிருத்திச் சங்க திருமுறைப் போட்டிப்பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

மயிலிட்டி தெற்கு வீரபத்திரர் ஆலயமுன்றலில் பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. திருமுறை ஓதல் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் பரிசில்களை வழங்கினார். இவ்விழாவில் திருமதி சத்தியதேவி துரைசிங்கம், பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

## ''பாரதிதாசன் கவிதைகள்''

வெள்வத்தை, திங்கள்

''இக்காலத்தில் பல இளைஞர்களுக்குக் கவிதை எழுதுவதற்கு ஆர்வத்தையும் ஆற்றலையும் கொடுத்தவை பாரதிதாசனின் கவிதைகளே. அவரது ஆற்றொழுக்குப் போன்ற இனிய கவிதைகளில்தமிழ்மணக்கும், தமிழ்ப் பண்பு மிளிரும், பெண்ணுரிமைக்காகவும் விதவைகளின் நல்வாழ்வுக்காகவும், தமிழ் உரிமைக்காகவும், சாதிக் கொடுமைகள் ஒழியவும் அவர் பாடிவைத்த கவிதைகள் சொல்லுந்தரமன்று.''

இவ்வாறு வெள்ளவத்தை தமிழ் அரசாங்க ஊழியர்கள் நடாத்தியபாரதிதாசன் நினைவுதினத்திற்குத்தலைமை வகித்துப்பேசிய பண்டிதர் திரு. வீ. பரந்தாமன்பேசுகையில் குறிப்பிட்டார்.

வெள்ளவத்தை டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தையில் இவ் விழா நடைபெற்றது. திருவாளர்கள் சி. கிருஷ்ணராசா, சி. குணேந்திரன் ஆகியோரும் பேசினர்.

## இன்றைய பலன்

செவ்வாய்க்கிழமை
[ஆடிமாதம் 2-ம் திகதி]

நட்சத்திரம்- அனுஷம் [பகல் 8-28 வரை]. மேல் கேட்டை.
திதி- துவாதசி இரவு 12-20 வரை.
சுபநேரம்-10-31-12-01
ராகுகாலம்- 3-01-4-31

மேடம்-சீரணக்குறைவு.
ரிஷபம்- உறவினர் வருகை.
மிதுனம்- ஆயுதபயம்.
கடகம்- ஆசார மிகுதி.
சிம்மம்-புகழ்பலவுண்டு.
கன்னி-நினைத்தது நடக்கும்.
துலாம்- பிரயாணத்தில் நஷ்டம்.
விருச்சிகம்- உறவால் இன்பம்.
தனுசு- பொதுசன மதிப்பு.
மகரம்- கடின சிந்தை.
கும்பம்-வந்திடும்லாபம்.
மீனம்- உற்சாக உள்ளம்.

சோதிடர் கணித்தவர்: திருமலை வேலுப்பிள்ளை

## சிறகுவலைச் சங்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

குருநகர் புனித சூசையப்பர் சிறகு வலைச்சங்கம் ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள தேசிய ஊழியர்சங்கத்தில் இணைந்து கீழ்க்காணும் உத்தியோகஸ்தர்களை தெரிவு செய்துள்ளது.

தலைவர்- திரு. யோ. சிங்கராயர். உபதலைவர்கள் எஸ். இம்மனுவேல்பிள்ளை, ஏ. அல்போன்ஸ், ஏ. ஞானப்பிரகாசம். பொதுக்காரியதரிசி- திரு. ஜி. ஞானசிங்கம். உபகாரியதரிசி ஜி. எட்வேட். தனாதிகாரி- ஜே. செல்வநாயகம். அமைப்பாளர்- ஏ. திரவியம்.

நிர்வாகிகள்; ஸி. குருசு, எம். செல்வராஜ், ஏ செபமாலை, ஏ. பர்ணாந்து, எஸ். செல்வம், எஸ். சில்வைராஜா, எஸ். யேசுநாயகம் ஆகியோர் நிர்வாகசபை உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

சங்கத்தின் வடபிரதேச பிரதிநிதி திரு. த. குணரெத்தினம் மீன்பிடி கூட்டுத்தாபன உதவி அதிபரை நேரில் சந்தித்து சங்க அங்கத்தவர்கள் அனைவருக்கும் தலா 700 யார் நீளமுள்ள 7 வலைகள் கொடுக்க ஒழுங்கு செய்துள்ளார்.

உடுப்பிட்டி

## இந்து சன்மார்க்க சங்கநிர்வாகிகள்

வெள்ளவத்தை, திங்கள்

உடுப்பிட்டி இந்து சன்மார்க்க சங்கத்தின் புது வருட உத்தியோகத்தர்களாகப்பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்; யோகி சுத்தானந்தபாரதியார், உபபோஷகர்கள்: திருவாளர்கள்- பொன் ஸ்ரீஸ்கந்தராசா, கோ. ஆழ்வாப்பிள்ளை, வே. தில்லைநாதன், தலைவர்: திரு. து. குருசாமிஐயர், உபதலைவர்கள்: திரு. வி.மு. கந்தையா, திரு. ஆ. செ. ஆறுமுகம், செயலாளர்: திரு. த. தில்லையம்பலம், உபசெயலாளர்; திரு. கோ. பாக்கியராசா, தனாதிகாரி: திரு. க. பாலசிங்கம், உபதனாதிகாரிகள்: திரு. வே. வடிவேல், திரு சி. இரங்கநாதன், கோவிற் பொறுப்பாளர்: திரு. சி. கனகசிங்கம், பஜனைக்கோஷ்டித் தலைவர்: திரு. பொன். பத்மநாதன்.

ஒன்பதுபேர் கொண்ட நிர்வாகசபைஒன்றும்தெரிவு செய்யப்பட்டது.

## தனிச்சிங்களத்துககு ஆட்சேபம்

வெள்ளவத்தை, திங்கள்

தபாற் தந்திப் போக்குவரத்துத் திணைக்களத்தில் தமிழ்மொழி மூலம் புதிதாகச் சேர்ந்த ஊழியர்களுக்கும் புகையிரத ஆணைச்சீட்டு வழங்கும் பத்திரம் தனிச் சிங்களத்தில் வழங்கப்படுவதை ஆட்சேபித்து அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம், பிரதம தபாலதிபதி திரு. ஏ. எல். பெரேராவுக்குக் கடிதமெழுதியுள்ளது.

புதிய ஊழியர்கள் தமது சேவையில் உறுதிப் படுத்தப்படும் வரையிலாவது அவர்களுடைய கருமங்களைத் தமிழில் ஆற்றிக் கொடுக்க வேண்டும் என்று அக்கடிதத்தில் சங்கச் செயலாளர் திரு. கே. குமரகுரு கேட்டிருக்கிறார்.

## நாட்டிலும் நகரிலும்

மேய்ச்சலுக்குப் போகும் மாடுகள் தவறிப்போகாமல் இருப்பதற்காக அவைக்குக் குறி சுடுவது நம்மூரில் வழக்கம்.

இதுபோலத் தான் வடபகுதியிலுள்ள மீனவர்களுக்கும் இனிமேல் குறிபோட்டு வைக்கப்போகிறார்களாம்.

சற்றே விபரமாய்க் கூறுகிறேன், கேளுங்கள்.

இலங்கையின் வடபகுதியிலுள்ள கடற்கரையோரமாகப் பல மீனவர்கள் வாழ்கின்றனர். அவர்கள் தொழிலின் நிமித்தம் இந்தியக் கரையோரமுள்ள கடல்களுக்குப் போவதுண்டு இந்தியாவின் தென்கரை, இலங்கையின் வடகரைக்கு மிகச் சமீபமாக இருப்பது அவர்களுடைய குற்றமல்ல.

இவர்கள் கள்ளக்குடியேற்றக்காரர்கள் என்று தவறுதலாகக் கைதுசெய்யப்படாமல் இருப்பதற்காக இவர்களுக்குக் குறி சுடப்போகிறார்களாம்.

இன்னும் விளக்கமாகச் சொல்லப்போனால் யாழ்ப்பாணத்தில் சமீபத்தில் நடந்த ஓர் உயர்தர மகாநாட்டில் வடபகுதியில் வாழும் மீனவர்கள் எல்லோருக்கும் அவர்களுடைய புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டைகளை கொடுக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒருவரிடம் இந்த அட்டை இருந்தால் அவர், தாம் கள்ளக்குடியேற்றக்காரர் அல்ல என்பதை நிரூபித்துத் தப்பிவிடமுடியும். கள்ளக் குடியேற்றத்தைத் தடை செய்வதில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்கும் இது மிகவும் அனுகூலமாயிருக்கும் என்று கூறுகிறார்கள்.

அடையாள அட்டை கொடுப்பது மாட்டுக்கு குறி சுடுவதை ஒத்திருக்கிறதல்லவா?

நல்ல யோசனைதான். ஆயினும் பல ஓட்டைகள் தெரிகின்றன.

கடலில் தொழில்செய்யப் போகும் மீனவர்கள் கடல் நீரில் நனையமாட்டார்கள் என்று சொல்லமுடியுமா? எப்பேர்ப்பட்ட அமைதியான கடலாயிருந்தபோதிலும், எவ்வளவுதான் பாதுகாப்பாக வைக்கப்பட்டபோதிலும் கடதாசியால் செய்யப்படும் புகைப்படமும், அடையாள அட்டையும் இரண்டொரு நாளில் நனைந்து உரு மாறிப்போகுமென்பது நிச்சயம். மீனவர்கள் அட்டையை வீட்டில் வைத்துவிட்டுப் போனாலும் அவர்கள் பல வழியாலும் இம்சிக்கப்படக்கூடும். தற்செயலாக அதை இழக்க நேரிட்டுவிட்டால் அவர்களுக்குச் சொல்லொணாத் துன்பமும் இடையூறுகளும் ஏற்படும்.

அதிகாரிகள் இந்தச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு தாறுமாறாகக் கைலஞ்சம் வாங்கவும் வசதியுண்டு.

அடையாள அட்டை இல்லாத காரணத்தினால் மீனவர்கள் அல்லாதவர்கள் நயினாதீவு, நெடுந்தீவு, பாலைதீவு முதலிய இடங்களுக்கு போய் வரும்போது கள்ளக் குடியேற்றக்காரர் என்று சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டால் அதன் பலனாக எவ்வளவு தொந்தரவு சாதாரண பொதுமக்களுக்கு ஏற்படப்போகின்றது?

கடலில் போய் தொழில் செய்கிறவர்கள் ஆக வடபகுதி மீனவர்கள் மட்டுமா —என்ற கேள்வியும் இங்கே எழுகிறது. நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம், திருக்கோணமலை, மட்டக்களப்பு முதலிய இடங்களிலும் மீனவர்கள் இருக்கிறார்கள். அவர்களும் கடற்றொழில் செய்பவர்கள். ...ர்... தற்செயலாகக் ...கா... குழப்பமேற்பட்டு வ... திக்குத் திசை தப்பி ... விட்டால் அவர்களின் ... என்னவாகும்?

இப்படிப் பல சிக்க... இந்த விஷயத்தில் சி... தால் வடபகுதி மீ... களுக்கு அடையாள அட்... வழங்கும் யோசனை... கைவிட்டுவிட்டு, அவ... எல்லோருக்கும், நா... மாடுகளுக்கு செய்வதுபோ... ஒவ்வொரு குறி மு... போட்டுவிட்டால் அடை... ளம் கண்டுபிடிக்கச் சுல... யிருக்குமென்று நான் அ... பிராயப்படுகிறேன்!

—வழிப்போக்...

## புதிய நிர்வாகிக...

யாழ்ப்பாணம், ...


சில்லாலை கத்தோ... இளைஞர்சங்க வருட... பொதுக்கூட்டம் திரு. ... ஈ. வேதநாயகம் தலை... நடைபெற்றபோது ... வருட உத்தியோ... களாகப் பின்வரு... தெரிவு செய்யப் பட்...

தலைவர்- ஜே. இமானு... உபதலைவர்- பி. ஜேசு... செயலாளர்- எஸ். மரி... கம். உபசெயலாள... டொன்பொஸ்கோ. ... ளாளர் - ஜி. எமே... விளையாட்டதிபர்- ஏ. ... நாயகம். உபவிளையா... பர்-எஸ். வில்லியம். ... சாலைப்பொறுப்பாளர்... கிறிஸ்தோபர். உபவா... லைப் பொறுப்பாளர்-எ... வேதநாயகம்.

ஃ ஃ ஃ

உடுவில் கிழக்கு ... சன சமூக நிலையத்தின் ... வருட உத்தியோகத்த... தெரிவு திரு. எஸ். ... லிங்கம் தலைமையில் ... பெற்றது. உத்தியோக... கள் விபரம் பின்வருமா...

தலைவர்: திரு. எஸ். ... தரலிங்கம், உபதலை... திரு. ஏ. ஆனந்தராசா, ... லாளர்: திரு. க. சி... துரை, உபசெயலாளர்: ... பொ. கமலநாதன், ... காரி: திரு. க. சிவராசா... தனாதிகாரி: திரு. கே. ... னந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ். சில்லாலை கத்தோலிக்க இளைஞர்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. எஸ். ஈ. வேதநாயகம் தலைமையில் நடைபெற்றபோது புது வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர்- ஜே.இமானுவல், உபதலைவர்- பி.ஜேசுதாசன் செயலாளர்- எஸ்.மரியநாயகம். உபசெயலாளர்-ஏ. டொன்பொஸ்கோ. பொருளாளர் - ஜி.எமேடியுஸ், விளையாட்டதிபர்- ஏ. வேதநாயகம். உபவிளையாட்டதிபர்-எஸ். வில்லியம். வாசகசாலைப்பொறுப்பாளர்- ஏ. கிறிஸ்தோபர். உபவாசிகசாலைப் பொறுப்பாளர்-எஸ்.ஈ. வேதநாயகம்.

ಃ ಃ ಃ

உடுவில் கிழக்கு பரணி சன சமூக நிலையத்தின் புது வருட உத்தியோகத்தர்கள் தெரிவு திரு. எஸ். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. உத்தியோகத்தர்கள் விபரம் பின்வருமாறு:

தலைவர்: திரு. எஸ். சுந்தரலிங்கம், உபதலைவர்: திரு. ஏ. ஆனந்தராசா, செயலாளர்: திரு. க. சின்னத்துரை, உபசெயலாளர்: திரு. பொ. கமலநாதன், தனதிகாரி: திரு. க. சிவராசா, உபதனதிகாரி: திரு. கே. பவானந்தன்.

---

செய்[illegible]வர்கள். [illegible]ர்களும் தற்செயலாகக் [illegible] காற்றுக் குழப்பமேற்பட்டு வடபகுதிக்குத் திசை தப்பி வந்துவிட்டால் அவர்களின் கதி என்னவாகும்?

இப்படிப் பல சிக்கல்கள் இந்த விஷயத்தில் சிக்குவதால் வடபகுதி மீனவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் யோசனையை கைவிட்டுவிட்டு, அவர்கள் எல்லோருக்கும், நாங்கள் மாடுகளுக்கு செய்வதுபோல ஒவ்வொரு குறி முதுகில் போட்டுவிட்டால் அடையாளம் கண்டுபிடிக்கச் சுலபமாயிருக்குமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன்!

—வழிப்போக்கன்

# யாழ். நவீன மார்க்கட் திட்டங்கள் தயார்

## கட்டட வேலைகள் விரைவில் ஆரம்பமாகும் என்கிறார் விசேஷகமிஷனர்

யாழ்ப்பாணம். செவ். யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் கட்டுவதற்கான கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படவிருப்பதாக மாநகரசபை விசேஷ கமிஷனர் திரு. என். நடேசன் நேற்று நமது நிருபரிடம் தெரிவித்தார்.

நவீன மார்க்கட்டிற்கான திட்டங்கள் தயாராகிவிட்டதென்றும், கூடிய சீக்கிரம் வேலைகள் ஆரம்பமாகுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு.எம். திருச்செல்வத்தின் உத்தரவு கிடைத்ததும், மார்க்கட்டிற்கான கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் கோரப்படுமென்றும் கமிஷனர் தெரிவித்தார்.

நவீன மார்க்கட் கட்ட வேண்டிய நிலத்தில் உள்ள சில தனிப்பட்டவர்களின் கடைகள் உடைப்பதற்கு அவர்களை வெளியேறுமாறு கேட்கப்பட்டிருப்பதாகவும் வேறு கடைகள் தரும்படி கடைக்காரர்கள் கோரியிருப்பதாகவும் தெரியவருகிறது. அந்நிலத்தில் உள்ள ஒரு கடை ஏற்கனவே உடைக்கப்பட்டுவிட்டது. இக்கடைக்காரர்களுக்கு நவீன மார்க்கட்டில் இடமொதுக்குவது பற்றி ஆலோசிக்கப்பட்டுவருவதாக அறியப்படுகிறது. [அ. நி.]

---

### இடமாற்றம்

யாழ்ப்பாணம், திங்கள் காரைநகர் கிராமசபையில் லிகிதராகக் கடமையாற்றிய திரு. செ. குமாரசாமி இம்மாதம் 15-ம்திகதி தொடக்கம் நீர்வேலி கிராமசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [ந.நி.]

## அதிகாரமற்ற மாவட்ட . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
படுத்தவேண்டுமென விரும்புகிறோம். [illegible]ங்களுக்கு அளித்த வாக்குறுதிக்கிணங்க மசோதாவைக்கொண்டுவருவதற்கு முன்னர் எங்களுடன் கலந்தாலோசனை செய்வாரென எதிர்பார்க்கிறோம்

## "மாவட்டசபை வெறும் பெயர்மாற்றமே"

அடுத்து உதவித் தொழில் மந்திரி திரு. எஸ். டி. எஸ். ஜயசிங்கா பேசுகையில், மாவட்டசபைகள் பற்றிக் குறிப்பிட்டு அதைப்பற்றி அஞ்சுவதற்கு எதுவுமில்லையென்றும் இப்போதுள்ள கச்சேரிகளுக்குப் பதிலாக மாவட்டசபைகள் இயங்குமென்றும்இதுவெறும்பெயர் மாற்றம் தானென்றும் சொன்னார். மாவட்ட சபைகள் அமைப்பதற்கு காலஞ்சென்ற திரு, எஸ். டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயகாவே முதலில் ஒப்புக்கொண்டாரென்றும் இதன்பின் ஆட்சிக்கு வந்த திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் அரசாங்கத்தின் சிம்மாசனப்பிரசங்கங்களிலும் மாவட்ட சபைகள் அமைப்பதுபற்றி தெரிவிக்கப்பட்டு வந்திருக்கிறதென்றும்திரு.ஜயசிங்கா கூறினார். முன்னைய அரசாங்கங்கள் மாவட்டசபைகளுக்கு சுயாதிபத்திய உரிமைகள் வழங்க ஒப்புக்கொண்டிருந்தனவென்றும் தேசிய அரசாங்கம், மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மாவட்டசபைகளையே அமைக்க ஒப்புக்கொண்டுள்ளதென்றும் திரு ஜயசிங்கா சொன்னார். கச்சேரி என்ற பெயர் இனி மாவட்டசபைகள் என மாறுமேயொழிய மாவட்ட சபைகள் பெரியவிஷயமல்லவென்றும் திரு. ஜயசிங்கா கூறினார். 'உள்ளூராட்சி சேவையில்நான் 25 வருட அனுபவமுள்ளவன். அமைக்கவிருக்கும் மாவட்டசபைகளுக்கு கிராமசபைகளுக்குள்ள அதிகாரங்கள்கூட இருக்க மாட்டா' என்றும் திரு. ஜயசிங்கா கூறினார்.

## "அதிகாரமில்லையென்றால் நம்பமுடியுமா"

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கம்புறுப்பிட்டி எம்.பி. திரு. பேர்ஸிவிக்கிரமசிங்கா பேசுகையில், மாவட்டசபைகள்பற்றி உதவித் தொழில் மந்திரி கூறுவதை எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும் என்று கேட்டார். 'அதிகாரமே இல்லாத மாவட்ட சபைகளுக்கு சமஷ்டிக் கட்சியினர் ஒப்புக்கொள்வார்களா? அதிகாரமில்லாத மாவட்ட சபைகளை ஏற்றுக்கொள்ள சமஷ்டிக்கட்சியினர் என்ன முட்டாள்களா' என்று திரு. பேர்ஸி விக்கிரமசிங்கா கேட்டார். மாவட்ட சபைகள் கச்சேரிஎன்றபெயருக்கு பதிலாகச்செய்யப்படவிருக்கும் பெயர்மாற்றம் தான்என்று உதவித்தொழில் அமைச்சர் கூறுவது மக்களை முட்டாள்களாக்கும் நினைப்பேயன்றி வேறல்லவென்றும், மாவட்ட சபைகள் விஷயத்தில் 'பெரியவிஷயங்கள், அடங்கி'யிருக்கின்றனவென்றும் அவர் கூறினார்.

---

### சிரமதானம்

கிளிநொச்சி, திங்கள் ''பொதுமக்களாகியநீங்கள் உங்கள் சக்தியை சிலமணி நேரமாவது இப்படிப்பட்ட நாட்டுவளர்ச்சிக்கும் ஒதுக்க வேண்டும்''

இவ்வாறு கரைச்சிக்காரியாதிகாரி திரு.கு, யோகநாதன் 7ம்வாய்க்கால் குருகுல விடுதிக்குச் சொந்தமான காட்டைச்சிரமதான மூலம் திருத்தும் விழாவை ஆரம்பித்துவைத்துப்பேசும்போது கூறினார்.

ஸ்ரீமத்வடிவேலு சுவாமியின் ஆசியுடன் காரியாதிகாரி ஒரு பெரிய மரத்தை தறித்து விழாவைத் தொடக்கி வைத்தார்.

யாழ். மாநகர சபை விவகாரம்:

## பிரதமரை துரையப்பா விரைவில் சந்திப்பார்

யாழ்ப்பாணம், திங். யாழ்ப்பாணம் மாநகர சபை தேர்தலை விரைவில் நடத்துவது சம்பந்தமாக முன்னாள் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில், முன்னாள் மாநகரசபை உறுப்பினர்கள் தூதுகோஷ்டியொன்று இம்மாத இறுதியில் பிரதமர் டட்லி சேனநாயக்காவைப் பேட்டி காணவிருப்பதாக அறியப்படுகிறது.

திரு. அல்பிரட் துரையப்பா இவ்வார இறுதியில் இலங்கைவந்து சேருவாரென அவரது நண்பர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இவ்வருடம், டிசம்பர் மாதத்திற்குமுன் மாநகரசபைதேர்தலை நடத்துவதாக உறுதியளிக்காவிடில், புதியவழக்கொன்றை தாக்கல் செய்வார்களென அறியப்படுகின்றது.

இவ்வழக்கு கொழும்பு அல்லது யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்படுமென்றும் இதுபற்றி ஏற்கனவே கொழும்பிலுள்ள பிரபல வழக்கறிஞர்களுடன் ஆலோசனை செய்யப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது. [அ. நி.]

---

### இளைஞர் தற்கொலை

காங்கேசன்துறை, திங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்பினால் பதினேழு வயது இளைஞர் ஒருவர் தற்கொலை செய்துகொண்டார். இந் ச்சம்பவம் [illegible]ல்லாகம் கொந்தளையில் நடைபெற்றுள்ளது.

மல்லாகத்தைச் சேர்ந்த முருகன் மகன் இரத்தினம் மரணம் சம்பந்தமாக நடைபெற்ற மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

இறந்த இளைஞரின் சிறிய தாயார் வள்ளிப்பிள்ளை சாட்சியமளிக்கையில் காலமானவர் தனது கணவரின் முதல் தாரத்து மகன் என்று கூறினார்.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.





இதோ வந்து விட்டது
விரி-மூடிப் பெட்டி
20 கொண்டது
போர் ஏசஸ்
பில்டர் முனைச் சிகரெட்டுகள்
நிறைந்த சுவை * சிறந்த பில்டர் முனை * குறைந்த விலை
சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிடெட்
CTC 113


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று பெண்களைத் திருமணம் செய்தவர் தண்டனை பெற்றார்

வவனியா, திங்கள்

மூன்று பெண்களைத் திருமணம் செய்து கொண்ட நபர் ஒருவர் குற்றத்தடுப்பு அதிகாரியிடம் வகையாக மாட்டிக் கொண்டார்.

வவனியா கோர்ட்டில் இவர்மீது தொடரப்பட்ட வழக்கில் மாஜிஸ்திரேட் இவருக்கு ஒரு வருடச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

ஆர். டி. குணவர்த்தன என்பவர் சட்டவிரோதமாகத் திருமணம் செய்து கொண்டதாக குற்றத் தடுப்பு அதிகாரியால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கிலேயே இப்படியாகத் தீர்ப்பளிக்கப்பட்டது. வவனியா மாஜிஸ்திரேட் திரு. ஆர். பரமகுரு முன்னிலையில் எதிரி குணவர்த்தன சாட்சியமளிக்கையில், ''நான் தயாவதி என்ற பெண்ணை 4-1-65-ல் சட்டபூர்வமாகத் திருமணம் செய்து கொண்டேன். சிறிது காலத்துக்குப்பின் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டேன். இதற்காக நான் மாதம் சிறை அனுபவித்தேன். பின்னர் விமலாவதி என்றபெண்ணைத் திருமணம் செய்து கொண்டேன்'' என்று கூறினார்.

## இ.போ.ச. ஊழியர் லண்டன் பரீட்சையில் சித்தி பெற்றார்

யாழ்ப்பாணம், செவ்.

இலங்கைப் போக்குவரத்துச்சபை யாழ். மேற்கு டிப்போ ஊழியரான திரு. குருசாமி தனபாலசிங்கம் லண்டன் ஏ.எம் ஐ. எம்.ஐ. (அசோஸிடேட்டட்மெம்பர் ஆப் மெக்கானிக்கல் இன்டஸ்றி) சோதனையில் சித்தியடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தமூவரிலும் இவர் ஒருவரே அரசாங்க ஊழியர் என்பது குறிப்பிடத்தக்கது. திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் இலங்கைப் போக்குவரத்துச்சபை தொழிலாளர் சங்கக் காரியதரிசியாகவும் இலங்கை ஐக்கிய தொழிற் சங்க நிதிக் காரியதரிசியாகவும் கடமையாற்றுகின்றார். இவர் தமிழில் எழுதியுள்ள மோட்டார்வாகனம் ஓட்டும் முறை, திருத்தஞ்செய்தல், பேணுதல் பற்றிய புத்தகம் விரைவில் வெளிவரவிருக்கின்றது. இப்படியான ஒரு நூல் இப்போது தமிழில்இல்லாத குறை இந்நூல் வெளிவந்ததும் நீங்கும்என்று எதிர்பார்க்கப்படுகின்றது. [ந. நி.]

# புங்குடுதீவில் சயரோக சிகிச்சை நிலையம்

ஊர்காவற்றுறை, திங்கள்

புங்குடுதீவு அரசினர் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் சயரோக சிகிச்சை நிலையம் ஒன்றை சுமார் பதினைந்தாயிரம் ரூபா செலவில் கட்டி முடிக்க புங்குடுதீவு சயரோகத்தடுப்பு இயக்கம் தீர்மானித்துள்ளது. சென்ற 11ம்திகதி இந்நிலையத்திற்கான அத்திபாரத்தை புங்குடுதீவு வைத்திய அதிகாரியும் சயரோகத்தடுப்பு இயக்கத் தலைவருமான டாக்டர் பி. இராசரத்தினம் ஆரம்பித்து வைத்தார்.

நிலையத்தை அமைப்பதற்கு மலாயா புங்குடுதீவு ஐக்கிய சங்கம் ஐயாயிரம் ரூபா நன்கொடை அளித்துள்ளது. இரு அறைகளைக்கட்டுவதற்கான செலவைபுங்குடுதீவுவாசியான திருமதி ரத்தினம்- வைத்தியலிங்கம் ஏற்றுள்ளார்.

இம்மாதம் இறுதிக்குள் கட்டிட வேலைகளை ஆரம்பிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன,

பின்வருபவர்கள் புங்குடுதீவு சயரோகத்தடுப்பு இயக்கத்தின் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: டாக்டர் பி. இராசரத்தினம் காரியதரிசி: திரு. ஏ. ஆறுமுகம் [ஓய்வு பெற்ற தபால் அதிபர்] தனதிகாரி;- திரு. எஸ். கந்தப்பிள்ளை. நிர்வாக சபை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

'மதவாச்சியில்

# கொள்ளை நடந்த தினம் 1-ம் எதிரி காரில் சென்றார்

## களத்தாவை இரட்டைக் கொலை வழக்கில் குமாரசாமி சாட்சியம்

அனுராதபுரம், திங்கள்

''தன்னுடைய காணிக்குள் சென்றால் கொலைசெய்யப்படுவார்கள்'' என்று 1ம் எதிரி எனது காவலாளிகளை பயமுறுத்தியிருக்கிறார்.''

களத்தாவை இரட்டைக் கொலைவழக்கில் சாட்சியமளித்த ஏ. குமாரசாமி மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு நேற்றுக் காலை அனுராதபுரம் மாஜிஸ்திரேட் திரு. பலின்ட் ரணசிங்கா முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில் அல்பிரட் டீ சொய்ஸா, களு அல்பேர்ட், வில்லி மாமா ஆகியோர் பி. கே. டி. பெரேரா ஜூலியஸ் சந்திரசேகரா ஆகியோரைக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குமாரசாமி சாட்சியத்தில் மேலும் கூறியதாவது: ''நான் அனுராதபுரத்தில் வாழும் ஒரு விவசாயி. நான் அதற்கு முன் கல்லோயா அபிவிருத்திச்சபையிலும், நீர்ப்பாசன இலாகாவிலும் கடமையாற்றினேன். 1966ம் ஆண்டு அனுராதபுரத்தில் 60 ஏக்கர் நிலத்தில் விவசாயம் ஆரம்பித்தேன். கடந்த வருடம் நான்கு கூலியாட்களையும் இரண்டு காவற்காரர்களையும் வேலைக்கு எடுத்தேன். எனது சொத்து சம்பந்தப்பட்ட சில பிரச்னைகளையிட்டு 1ம் எதிரி சொய்ஸாவைச் சந்திக்கச் சென்றேன். எனது காவற்காரர்களைக் கொலைசெய்வதாக 1ம் எதிரி பயமுறுத்தியிருந்தார். எனக்கு இந்த நிலத்தைத் தவிர வேறு வருமானம் கிடையாது என்று 1ம் எதிரியிடம் கூறினேன். தனது வேலைத்தலத்தில் என்னை ஒரு மேற்பார்வையாளராகக் கடமையாற்றும்படி 1ம் எதிரி என்னிடம் கேட்டார். நான் இதற்குச் சம்மதித்து மறுநாள் ரம்பவிலுள்ள அவரது வேலைத் தலத்திற்குச் சென்றேன். நான் சென்ற திகதி ஞாபகமில்லை. இந்த வேலைத்தலம் யாழ்ப்பாணம்-அனுராதபுரம் வீதியில் உண்டு. அங்கு 1ம் எதிரிக்குச் சொந்தமான உழவு யந்திரங்கள் இருந்தன. நான் அங்குள்ள எல்லா யந்திரங்களினதும் குறிப்பு எடுத்தேன்.

நான் என்னுடைய கமத்திலிருக்கும்போது சிறிசேனவும், அவருடைய ஆட்களும் என்னைத் துரத்தினார்கள். நான் 1ம் எதிரியிடம் முறையிட்டேன். இதுசம்பந்தாக வழக்கு தாக்கல்செய்துள்ளதாகவும் கூறினேன்.

மதவாச்சியில் நடைபெற்ற கொள்ளை பற்றியும் கேள்விப்பட்டேன். அன்றைய தினம் 1ம் எதிரி சொய்ஸா அனுராதபுரத்திலிருந்து மதவாச்சிக்குக் காரில் விரைவாகச் சென்றதைக் கண்டேன். அன்றிரவு 10-30 மணிவரை அவர் திரும்பி வராததால், நான் இரவு 11-45 மணிக்கு பஸ் மூலம் அனுராதபுரத்திற்கு வந்தேன்.

### பம்பாய் வெங்காயம் கிடைக்கும்

கொட்டாஞ்சேனை, திங்கள்

நாட்டில் ஏற்பட்டுள்ளபம்பாய் வெங்காய தட்டுப்பாடு வெகுவிரைவில்நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவிலிருந்து கொழும்பு வந்த கப்பலிலிருந்து 1000 தொன் பம்பாய் வெங்காயம் இவ்வாரம்இறக்குமதி செய்யப்பட்டது. இது நாட்டின் பல பாகத்திலும் வெகுவிரைவில் விநியோகிக்கப்பட விருக்கிறது.

மேலும்மிளகாய், கருவாடு மாசி வகைகளும் அடுத்த சில வாரங்களில் இறக்குமதி செய்யப்படுமென்று உணவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### சூடலையில் தற்கொலை

உடுப்பிட்டி, திங்கள்

துன்னாலை தெற்கைச் சேர்ந்த தம்பையா செல்வரத்தினம் (வயது 58) என்னும் வயோதிபர் அங்குள்ள சுடலையொன்றில் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் மரணவிசாரணை நடத்தினார். காலஞ்சென்றவர் நச்சுத்திராவகம் அருந்தியதை நேரில்கண்டவர் எனக் கூறப்படும் சின்னையா சிவப்பி உட்படப் பலர்சாட்சியமளித்தனர். தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

### கவலையீனத்தால் ரூ.10 லட்சம் நஷ்டம்

கொழும்பு, திங்கள்

அரசாங்க இலாகாக்களிலும் கார்ப்பரேஷன்களிலும் கவலையீனம் காரணமாக வருடமொன்றுக்கு 10 லட்சம் ரூபாவரை நஷ்டமேற்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வித வீண் நஷ்டத்தை எவ்வாறு தடுக்கலாம் என்பது பற்றி திட்ட அமுல் கமிட்டி தீவிரமாக ஆலோசனை செய்து வருகிறது.

பொறுப்பற்ற தன்மையும் கவலையீனமும் வீண் விரயத்துக்குக் காரணமாகவிருப்பதாக திட்ட அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### இலங்கை திரும்பினார்

உடுவில், திங்கள்

சென்றவருடம் அக்டோபர் மாதம், காமன்வெல்த் உபகாரநிதி அடிப்படையில் ஒருவருடகால விசேஷ பயிற்சி பெறுவதற்காக லண்டன் சென்றிருந்த ஆசிரியர் திரு. எஸ். டி ஜெயசிங்கம் தமது பயிற்சியை முடித்துக்கொண்டுஇலங்கை திரும்பியுள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பல ஆண்டுகளாக ஆசிரியராகப்பணியாற்றி வந்த திரு. எஸ். டி. ஜெயசிங்கம், பின்னர் யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்ப பாடசாலையின் வர்த்தக ஆசிரியராகவும், பதில் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.

### 'கெயர்' மாவில் 70 வீதம் நீர்?

காங்கேசன்துறை, திங்.

அரசாங்கத்தால் வழங்கப்படும் 'கெயர்' மாவில் எழுபது வீதம் தண்ணீர் கலக்கப்படுகிறதாம்.

அரசாங்க பால் விநியோக நிலயங்களில் சிறு பிள்ளைகளுக்காக கொடுக்கப்படும் 'கெயர்' மாவு முப்பது வீதமும் மிகுதி தண்ணீராகவும் இருக்கிறதாக அரசாங்க பரிசோதகர்களே முறையீடு செய்துள்ளனராம். இது பற்றி எதுவிதமான நடவடிக்கையும் ஏன் எடுக்கப்படவில்லையென்று காங்கேசன்துறை பட்டினசபையின் முன்னாள் உப தலைவர் திரு. வி. இரத்தினராஜா சமூக சேவா மந்திரிக்கு அனுப்பியுள்ள அவசரக் கடிதமென்றில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### விவசாயிகளிடம் ஆலோசனை கேட்பர்

கொழும்பு. திங்கள்

விவசாய அபிவிருத்தித் திட்ட அதிகாரிகள் விவசாயத்திலீடுபட்டிருக்கும் விவசாயிகளிடம்விவசாயம்பற்றி ஆலோசனை கேட்கவிருக்கிறார்கள்.

1967-ம் வருட அபிவிருத்தித் திட்டத்தில் இவர்களது ஆலோசனை பெறப்படும். விவசாய அபிவிருத்தித் திட்டத்தில் விவசாயிகளிட [illegible] என்பதுகுறிப்பிடத்தக்கது.

# சைக்கிள் திருட்டில் 'சாதனை': எதிரிக்கு 6 மாத கடூழியம்

காங்கேசன்துறை, ஞாயிறு

பருத்தித்துறையைச் சேர்ந்த பொ. மகாலிங்கம் என்பவர் மயிலிட்டியைச் சேர்ந்த ஏ. பி. தேவதிரவியம் என்பவரின் கடையில் வேலைக்கு அமர்ந்திருக்கையில் அவரது சைக்கிள் ஒன்றைத் திருடியதாக காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு இன்று மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ் நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரி ஆறுமுறை கோர்ட்டில் குற்றப்பட்டதை நீதிபதி வாசித்துக் காட்டினார். மூன்று முறை சைக்கிள் திருட்டிலும், ஒரு முறை கத்திக்குத்திலும், இரு முறை ரொக்கப் பணக்களவிலும் எதிரி குற்றப்பட்டிருப்பது பற்றி நீதிபதி விசாரணை செய்த போது எதிரி ஒப்புக் கொண்டார். நீதிபதி எதிரியை நோக்கி நீர் 1952-ம் ஆண்டு தொடக்கம் சைக்கிள் திருட்டிலே கைவரிசையைக் காட்டிவந்திருக்கிறீர். 1967.ம் ஆண்டுக்குப் பின்னாவது திருந்தி வாழ முயற்சிக்கவேண்டும் எனக் கூறி எதிரிக்கு 6 மாதக் கடூழியச் சிறைத் தண்டனையும், 2 வருட சாதாரண சிறைத் தண்டனையும் விதித்து 2 வருடம் பொலிஸ் பாதுகாப்பிலும் இருக்குமாறு தீர்ப்பளித்தார்.

### ஆசிரியைமீது குற்றச்சாட்டு

கொழும்பு, திங்கள்

17 வயதுடைய ஒரு மாணவியை கடுமையாக அடித்துக் காயப்படுத்தியதாக கொழும்பு பெண்பாடசாலையொன்றைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதுபற்றிய விசாரணையை மேற்கொண்ட மேற்கு பிராந்திய வித்தியாதிபதி திரு. வி. வீரவத்தன, கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லேக்கு ஓர் அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

கொழும்பு பொலிசார் களுபோவில்ல ஆஸ்பத்திரி சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கையை எதிர்பார்த்திருக்கின்றனர். இந்த வைத்திய அதிகாரியே இந்த மாணவியை வைத்திய பரிசோதனை செய்தார்.

### தேர்த் திருப்பணி

யாழ்ப்பாணம், செவ்.

வண்ணை விசுவேசப்பிள்ளையார் கோவிலுக்கு புதியதொரு சித்திரத்தேர் செய்யப்படவிருக்கிறது. இதற்கான ஆரம்பவிழா அண்மையில் சித்திரப் பேராசிரியர் திரு. ஆ. தம்பித்துரை தலைமையில் மேற்படி கோவிலின் தேர்த்திருப்பணிச் சபையாரால் அமைக்கப்பெற்ற சித்திரசிற்பக் கூடத்தில் நடைபெற்றது. திருநெல்வேலி சிற்பாசாரியார் திரு. ஆறுமுகம் ஜீவரெத்தினம் ஆரம்பவேலையைத் தொடக்கி வைத்தார். இத்தேர் ரூ. 50,000 செலவில்அமைக்கப்படுமெனத்தெரிகிறது.

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை-கே. நாராயணபிள்ளை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல் வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல்12-00சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 நேயர் விருப்பம்.

இரவு 6-15 குதூகலம், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பத்மசிறி செல்வநாயகம், 7-45 பேச்சு—கே. வச்சிரவேலு முதலியார், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாகசுரம்—கே. துரைராசா, 10-15 தேர்ந்த இசை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமையனின் சாதனையைத் தம்பி முறியடித்தார்

## வடமராட்சி பாடசாலைகள் விளையாட்டுப் போட்டி முடிவுகள்

இமையாணன், திங்கள்

தமையன் நிலைநாட்டிய சாதனையொன்றைத் தம்பி முறியடித்து புதிய சாதனையை நிலைநாட்டிய சம்பவம் ஒன்று வடமராட்சிப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டியில் நிகழ்ந்துள்ளது. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் மாணவனான எம். சிதம்பரநாதன் என்பவர் குண்டெறிதல் போட்டியில் 32 அடி ஒரு அங்குலத் தூரமெறிந்து புதிய சாதனையை நிலைநாட்டினார். இதற்குமுன் இவருடைய தமையனே 31 அடி 10 அங்குல தூரம் எறிந்து சாதனையை நிலைநாட்டியிருந்தார். சிதம்பரநாதன் மத்தியபிரிவின் சாம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

உடுப்பிட்டி, திங்கள்

வடமராட்சி ஆசிரியர் சங்க ஆதரவில் நடாத்தப்படும் வருடாந்த வடமராட்சிப்பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் சென்ற செவ்வாய், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாட்களும் நெல்லியடி 'மத்தியமகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது, இப்போட்டிகளுக்கு மனநோயாளர் சிகிச்சை நிபுணர் டாக்டர் திரு. ரீ. அருளம்பலமும் அவருடைய பாரியாரான சுகாதார வைத்திய அதிகாரி திருமதி டாக்டர் எம். அருளம்பலமும் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டனர். வடமராட்சிப்பகுதியிலுள்ள 10 கல்லூரிகள் பங்குபற்றிய இம்மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் 6 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன. புதியசாதனைகள் விபரம் வருமாறு-

பெண்கள் [மேற்பிரிவு] நீளம் பாய்தல் -எஸ் ராஜேஸ்வரி, [மெதடிஸ்தமிஷன் மகளிர் கல்லூரி][ கீழ்ப்பிரிவு] 100 மீட்டர் ஓட்டம்- எஸ்' செல்வராணி [உடுப்பிட்டி மகளிர்கல்லூரி]

ஆண்கள்- [மேற்பிரிவு] தடியூன்றிப்பாய்தல்- எஸ் கமலேஸ்வரன் ஹாட்லிக்கல்லூரி 100மீட்டர் ஓட்டம்- வீ.மதிவாணன், ஹாட்லிக் கல்லூரி, தடைதாண்டிப்பாய்தல்: எஸ். கமலேஸ்வரன், ஹாட்லிக்கல்லூரி. ]டுத்தியபிரிவு] குண்டெறிதல்-எம், சிதம்பரநர்தன், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்கல்லூரி.

இவ்வருட வடமராட்சிச் சாம்பியன்கள் விபரம் வருமாறு-

ஆண்கள்[மேற்பிரிவு]எஸ். கமலேஸ்வரன் ஹாட்லிக்கல்லூரி. [மத்தியபிரிவு] எம். சிதம்பரநாதன், உடுப்பிட்டி அ.மி-கல்லூரி. வீ.சரச்சந்திரா ஹாட்லிக்கல்லூரி. [கீழ்ப்பிரிவு] கே.திரவியம் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி. பெண்கள் மேற்பிரிவு) எஸ். இராசேஸ்வரி [பருத்தித்துறை மெதடிஸ்த மிஷன்மகளிர் கல்லூரி]. [மத்தியபிரிவு] ஐ, சக்திமகானந்தா [உடுப்பிட்டிமகளிர் கல்லூரி] [கீழ்ப்பிரிவு] எஸ். செல்வராணி [உடுப்பிட்டி மகளிர்கல்லூரி].

### இளங்கோவுக்கு முதலிடம்

ஊர்காவற்றுறை, திங்கள்

வேலணை மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையட்டுப் போட்டியில் 167 புள்ளிகளைப் பெற்ற இளங்கோ இல்லம் முதலாவது இடத்தைப் பெற்றது.

வடமாநில வித்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஆறுமைல் மரதன் ஓட்டப் போட்டியில் வள்ளுவர் இல்லத்தைச் சேர்ந்த எஸ். சபாரத்தினம் வெற்றி பெற்றார். இவர் 24 நிமிஷம் 40 செக்கனில் ஓட்டத்தை முடித்தார். ஒரு மைல் ஓட்டத்தில் பாரதி இல்லத்தைச்சேர்ந்த எஸ். சோமஸ் கந்தராசா வெற்றியீட்டினார்.

சாம்பியன் விபரம் வருமாறு:-

மேற்பிரிவு ஆண்கள்:- பி. சிவபாலன்[பாரதி இல்லம்] ஆர். இராசலிங்கம் [இளங்கோ இல்லம்]. மேற்பிரிவு பெண்கள்:- எஸ். லோகேஸ்வரி[வள்ளுவர் இல்லம்[ மத்தியபிரிவு ஆண்;-எம். ஜீவன் [வள்ளுவர் இல்லம்].மத்திய பிரிவு பெண்;-கே. ஜெயலட்சுமி[பாரதி இல்லம்]. கீழ்ப்பிரிவு ஆண்:-வி. சிவானந்தலிங்கம்[கம்பர் இல்லம்]. கீழ்ப்பிரிவு பெண்:-ஆர். கமலேஸ்வரி[வள்ளுவர்இல்லம்]

## உதைபந்தாட்ட சாம்பியன்கள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் 'ஏ', 'பி' பிரிவுகளுக்கான உள்ளூர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டிய 'ஏ' பிரிவுக் கோஷ்டியில் சாம்பியன் இடத்தைப் பெற்ற யங் ஒலிம்பியன் கோஷ்டிக்கும் தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற பலத்த போட்டியில் யங் ஒலிம்பியன் கோஷ்டி தெரிவுக் கோஷ்டியை 5—1 கோல்களால் வெற்றியீட்டியது. மத்தியஸ்தராக திரு ஜி. இம்மானுவல் கடமையாற்றினார்.

'பி' பிரிவில் சாம்பியனான கோஷ்டிக்கும் தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் அழகு நட்சத்திரக்கோஷ்டி 2—1 கோல்களால் வெற்றிபெற்றது. மத்தியஸ்தராக திரு. எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை கடமையாற்றினார்.

பிரதம விருந்தினராக கரையூர் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. சூசைப்பிள்ளை கலந்துகொண்டார்.

சாம்பியனான இருகோஷ்டிகளுக்கும் வெற்றிக்கிண்ணங்கள் திரு. சூசைப்பிள்ளையால் வழங்கப்பட்டது. திரு. எம். பாவிலுப்பிள்ளை நன்றிகூறினார்.

## கழக ஆண்டு விளையாட்டுப்போட்டி முடிவுகள்

வல்வெட்டித்துறை, திங்கள்

வல்வெட்டித்துறை உதய சூரியன் கழக 5-வது ஆண்டு வருடாந்த விளையாட்டுப் போட்டி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு.வேர்ணன் எம். அபயசேகரா தலைமையில் உதய சூரியன் உல்லாசக் கடற்கரைமைதானத்தில் நடைபெற்றது.

செனட்சபை உறுப்பினர்களான திரு. டி. ஈ. வி. திசநாயக்கா, திரு. டி ஜி. பி. றணசிங்கா, பட்டினசபைத் தலைவர் திரு. வி. இரத்தினவடிவேல் மற்றும் பல பிரமுகர்களும் இப்போட்டியில் கலந்துகொண்டனர்.

வெற்றிவீரர்களுக்கு திருமதி டி. ஈ. வி. திசநாயக்கா பரிசில் வழங்கினார்.

மோகனதாஸ் இல்லம் முதலாம் இடத்தையும், இராஜவடிவேல் இல்லம், பாஸ்கரானந்த இல்லம், குணசுந்தரம் இல்லம் முறையே இரண்டாம், மூன்றும், நான்காம் இடத்தையும் பெற்றன.

போட்டி முடிவுகள் பின்வருமாறு:- 25 மைல் சைக்கிள் ஓட்டம்:- வி. நவரத்தினம, கே. தயாநிதி, ஆர். இரத்தினம். 10 மைல் ஓட்டம்:- சி. சாம்பசிவமூர்த்தி, ஐ. பரமேஸ்வரன். எம். பரூக். 5 மைல் பெண்கள் சைக்கிள் ஓட்டம்:- செல்வி வி. இளவரசி, செல்வி வி. இளஞ்செல்வி, செல்வி வி. இளந்தேவி, 40 வயதுக்கு மேற்பட்டோர்:- எம். பாலசுப்பிரமணியம், பி. வேலும்மயிலும். 1 மைல் தடை ஓட்டம்;- எஸ். தங்கவேல், சோதி அருணாசலம். 1 மைல் ஓட்டம்:- யூ. எம். பாருக், எஸ். நாராயணசாமி. பெண்கள் சங்கீதக் கதிரை:- ஜே. சந்திரவதை, வி. மீராதேவி. 4 X 1/2 மைல் அஞ்சல் ஓட்டம்:- றெயின்போஸ் கழகம் மயிலிட்டி விளையாட்டுக் கழகம்.

பின்வருவோர் சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:- கீழ்ப் பிரிவு ஆண்:- எம். நந்தகோபால். க. இரத்தினசிங்கம். மத்திய பிரிவு:- சி. குமாரவேலு, கு. மோகன். மத்தியபிரிவு பெண்:- எஸ். ஜெயந்திமலர், சி. ஞானேஸ்வரி. மேற்பிரிவு ஆண்:- வே. சந்தானகோபால், எஸ். சாந்தகுணவடிவேல். அதிமேற்பிரிவு ஆண்:- எஸ். வெற்றிவடிவேல். எம். பிரேம்குமார், பி. குகன். அதிமேற்பிரிவு பெண்:- எம். தெய்வமலர்.

### 'பிரம்படி' வெற்றி

உடுவில், திங்கள்

அராலி வடக்கு விளையாட்டுக் கோஷ்டியினருக்கும், கொக்குவில் பிரம்படி இளைஞர் கோஷ்டியினருக்குமிடையில் நேற்றுமாலை நடைபெற்ற சினேகபூர்வமான ஓர் உதைபந்தாட்டப்போட்டியில் பிரம்படிக் கோஷ்டியினர் அராலிக்கோஷ்டியினரை தோற்கடித்தனர். பிரம்படிக் கோஷ்டிக்கு 4 கோல்களும், அராலி கோஷ்டிக்கு 2 கோல்களும் கிடைத்தன.

போட்டிக்கு திரு. அ. ஆனந்தராசா மத்தியஸ்தம் வகித்தார்.

### தாச்சிப் போட்டி

உடுவில், திங்கள்

உடுவில் ஸ்டார் விளையாட்டுக் கழகத்துக்கும், மானிப்பாய் லின்ஸ்டன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நேற்றுமாலை உடுவிலில் நடைபெற்ற சினேக பூர்வமான ஒரு தாச்சிப்போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

திருவாளர்கள் எஸ். கணேசரத்தினம், எம். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தனர்.

## "நல்ல மாணவர்களை உருவாக்குபவர் ஆசிரியரே"

வெள்ளவத்தை, ஞாயிறு

''நாட்டின் வருங்கால நல்ல மாணவர் சமுதாயத்தை உருவாக்கும் பணி ஆசிரியத் தொழில். ஏனைய அரசாங்கத் தொழில்களைவிடச் சிலவேளைகளில் ஊதியம் குறைந்ததாக விருந்தாலும் அத்தொழில் மனித சமுதாயத்தில் வகிக்கும் பண்பும், மதிப்பும் அளப்பரியவை. ஆசிரியர்கள் ஏணியும், தோணியும்போன்றவர்கள். ஆற்றைக் கடந்து கரைசேரத் தோணியும் சுவரைக் கடந்து அப்பாற் செல்ல ஏணியும் உதவுவதுபோலக் கல்வி என்ற ஆற்றைக் கடந்து கரைசேர ஆசிரியன் தோணியாக உதவுகிறான்.''

இவ்வாறு கொழும்பு பிரதம தபாற்கந்தோரில் தமிழ்த் தட்டெழுத்தாளராகக் கடமையாற்றி நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரிக்கு வர்த்தக ஆசிரியராக நியமனம்பெற்றுச் செல்லும் திரு. இ. நகுலேஸ்வர சர்மாவுக்குப் பிரதம தபாற்கந்தோர் ஊழியர்கள் அளித்த பிரிவுபசார வைபவத்திற்குத் தலைமை வகித்த அகில இலங்கை அரசாங்க தமிழ் தட்டெழுத்தாளர்கள் சங்கத் தலைவர் திரு. கோ. பாக்கியராசா பேசுகையில் கூறினார்.

காசுக்கணக்குக் கிளையைச் சேர்ந்த திருவாளர்கள் க. பேரம்பலம், எஸ் அருமைநாயகம், ம. சிங்கராயர். கே. ஞானேஸ்வரன். செல்வி றஞ்சினி நடராசா ஆகியோருட்படப் பலரும் திரு. சர்மாவைப் பாராட்டியும் ஆசிரியத் தொழிலைப் போற்றியும் பேசினர். திரு கே. குமாரகுலசிங்கம் நன்றி கூறினார்.

## கெய்ரோ 'உச்சி' மகாநாட்டில் அரபுத்தலைவர்கள் உடன்பாடு

கெயிரோ, ஜூலை 17

ஐந்து அரபு நாடுகளின் வெளியுறவு மந்திரிகள் மாநாடொன்று விரைவில் கார்டூமில் நடைபெறும்.

கெயிரோவில் கூட்டுப் பேச்சுவார்த்தைகள் நடாத்திய ஐ. அ. கு. ஈராக், சூடான், அல்ஜீரியா, சிரியா நாட்டுத்தலைவர்கள் இவ்விதம் முடிவு செய்துள்ளனர்.

**உடன்பாடு**

இஸ்ரேல் கைப்பற்றியுள்ள அரபுப் பிராந்தியங்களை மீட்பது பற்றி எடுக்க வேண்டிய நடவடிக்கையையிட்டு இந்த ஐந்து தலைவர்களும் ஓர் உடன்பாட்டுக்கு வந்துள்ளனர்.

ஐ. அ. கு. ஜனாதிபதி நாஸர், ஈராக் ஜனாதிபதி ஆரீப், சிரியா ஜனாதிபதி அட்டாஸி, அல்ஜீரிய ஜனாதிபதி பூமேடியான், சூடான் பிரதமர் ஆகியோர் இந்த அரபு உச்சி மாநாட்டில் கலந்து கொண்டனர்.

## தி. மு. க. வும் காங்கிரசும் ஒன்றையொன்று மதிக்க வேண்டு…

### சென்னையில் உப ராஷ்டிரபதி

சென்னை, ஜூலை 17

சென்னைக்கு வந்துள்ள இந்திய உப ராஷ்டிரபதி திரு. வி. வி. கிரி, மத்திய அரசாங்கத்துக்கும் ராஜ்ய அரசாங்கங்களுக்குமிடையே அதிக ஒத்துழைப்பு அவசியம் என வலியுறுத்தியுள்ளார்.

அவருக்கு நேற்று மைலாப்பூர் அகெடமியால் அளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

**பரஸ்பர மதிப்பு**

சென்னையில் தற்போது ஆட்சியிலிருக்கும் தி. மு. கழகம், எதிர்க்கட்சியான காங்கிரசை மதித்து நடக்க வேண்டுமென்றும், அதேபோல் காங்கிரசும் தி. மு. க.வை மதிக்க வேண்டுமென்றும் உப ராஷ்டிரபதி ஆலோசனை கூறினார்.

**வாழ்க்கைக் குறிப்பு**

தாம் தமது வாழ்க்கை நினைவுகள் பற்றிய நூலொன்றை எழுத ஆரம்பித்திருப்பதாகவும் திரு. வி. வி. கிரி குறிப்பிட்டார்

### உயிர்பாதுகாப்பு சங்கம்

வெள்ளவத்தை, திங்கள்

வெள்ளவத்தை புகையிரத நிலையத்திற்கு அண்மையிலுள்ள உயிர்பாதுகாப்புச் சங்கத்தினர் பிரதிவாரமும் போயா தினங்களில் இப்பகுதியிலுள்ள இளைஞர்களுக்குக் கடலில் நீச்சல், முதலுதவிப் பயிற்சி முதலியன போதித்துவருகிறார்கள் இவ்வகுப்புகளில் அமெரிக்க, ரஷ்ய உயிர்பாதுகாப்பு நிபுணர்களும் கலந்து உதவி செய்கிறார்கள். இத்துடன் இரவுவேளைகளில் பிறநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட செய்திப்படங்களையும் காண்பிக்கிறார்கள்.

### எழுச்சிநாள் கூட்டங்கள்

சென்னை, ஜூலை 17

எதிர்வரும் ஜூலை 23ந் திகதி ஊர் தோறும் எழுச்சி நாள் கூட்டங்கள் நடத்துமாறு தமிழக முதன் மந்திரி திரு. சி. என். அண்ணாதுரை மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சேலம் இரும்புத்தொழிற்சாலைத்திட்டத்தையும், தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தையும் நிறைவேற்றக் கோரி, மத்திய அரசை வற்புறுத்துவதற்காக, ஜூலை 23ந் திகதி தி.மு.கழகம் எழுச்சி நாள் கொண்டாடுவது தெரிந்ததே.

### பென்ஷன் தாமதமாவதற்கு காரணம்

கொழும்பு, திங்கள்

சம்பந்தப்பட்ட இலாக்காக்கள் குறிப்பிட்ட தஸ்தாவேஜுகளைத் தாமதிப்பதாலேயே பென்ஷன் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக திறைசேரி அறிவித்துள்ளது. ஓர் உத்தியோகத்தர் ஓய்வு பெறுவதற்கு குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன்னராவது அவர் ஓய்வு பெறுவது சம்பந்தமான பத்திரங்கள் சம்பந்தப்பட்ட இலாகாவினால் சரியாகப் பூர்த்தியாக்கப்பட்டு அனுப்பப்பட வேண்டுமென திறைசேரி சகல இலாகாக்களுக்கும் அறிவித்தல் செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் பிள்ளைகள்

# 'தொழில் அறிவு பெறுவதை தடுக்கப் பார்க்கிறார்கள்'

## எதிர்க்கட்சியினர் மீது உடுவில் எம். பி. சீற்றம்

கொழும்பு, ஞாயிறு

ஆங்கிலமொழி கல்வியை அகற்ற முற்படுவதன் மூலம் எதிர்க் கட்சியினர் தமிழ் மக்கள் தொழில் நுட்ப அறிவு பெறும் சந்தர்ப்பங்களைக் கூட இல்லாமல் செய்து விடுவதற்கு முயற்சி செய்கிறார்கள் என்று உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் குற்றஞ்சாட்டினார்.

சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட்டதால் தமிழ் பிள்ளைகள் அரசாங்க சேவையில் இடம் பெறுவது சங்கடமாகியுள்ளது. இப்பொது ஆங்கிலத்தை நீக்குவதற்கு முயற்சி செய்கிறார்கள். இதனால் தமிழ் பிள்ளைகள் டாக்டர்களாகவும், என்ஜினியர்களாகவும், வேறு விஞ்ஞான துறைகளிலும் பயிற்சி பெறும் சந்தர்ப்பங்களை இழக்க நேரும். அரசாங்க உத்தியோகங்கள் மட்டுமின்றி தொழில் நுட்ப அறிவு பெறும் சந்தர்ப்பங்களையும் தமிழ் பிள்ளைகள் இழக்கநேரும். இந்த நிலைமை உருவானால் தமிழ் பேசும் மக்களின் நிலைமை மேலும் படுமோசமாகும்'' என்று திரு. தர்மலிங்கம் கூறினார்.

தமிழ் பிள்ளைகள் தமிழுடன் ஆங்கிலமும் சிங்களப் பிள்ளைகள் சிங்களத்துடன் ஆங்கிலமும் கற்பதற்கு வகை செய்ய வேண்டும் இல்லையென்றால் தமிழ் பிள்ளைகள் தொழில் நுட்பக் கல்வி பெறும் வாய்ப்பையும் இழந்து விடுவார்கள் என்று திரு. தர்மலிங்கம் மேலும் கூறினார்.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது திரு. தர்மலிங்கம் பேசினார்.

### கல்வி வெள்ளை அறிக்கை

கல்வி வெள்ளை அறிக்கை பற்றி திரு. தர்மலிங்கம் குறிப்பிட்டுப் பேசுகையில், கல்வி இலாகா அதிகாரிகள் தாங்கள் அனுப்பும் சுற்று நிருபங்களில் சதிவேலைகள் புரிந்து வருகிறார்கள். என்று குற்றஞ்சாட்டினார். இந்தமாதிரி கண்ணை மூச்சு வேலைகள் செய்யும் அதிகாரிகள் பற்றி கல்வி மந்திரி எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

### மாவட்டசபைகள்

மாவட்ட சபைகள் பற்றி திரு. தர்மலிங்கம் பேசுகையில் காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா மாவட்ட சபைகள் கொள்கையை ஏற்றுக்கொண்டார். அதே கொள்கையை இப்பொழுது அவரைப் பின்பற்றுபவர்கள் எதிர்ப்பது விசித்திரமாக இருக்கின்றது என்றார்.

1965-ம் ஆண்டு சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை விவாதிக்கப்பட்டபோது திரு. ஆர். ஜி. சேனநாயகாவின் கேள்வியொன்றுக்கு திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பதிலளித்தபோது மாவட்டசபைகள் நாட்டைப் பிரித்துவிடமாட்டாதென்றார். ஆனால் இன்று மாவட்டசபைகள் நாட்டைப் பிரித்துவிடும் என்று கூறுவதின் காரணம் தெரியவில்லை தமிழரசுக்கட்சியினர் மாவட்ட சபைகள் வேண்டுமென்று கோருவதுதான் இதற்குக் காரணம் என்றும் திரு. தர்மலிங்கம் கூறினார்.

### விவசாயத்துக்கு முக்கியத்துவம

உடுபிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில், முந்திய அரசாங்கம் கைத்தொழில்களுக்கே முக்கியத்துவம்கொடுத்தது. அதனால் பெரும் பயன் ஏற்படவில்லை. தமிழ்ப் பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டேவந்தன. காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை அப்பொழுதே அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தால் இப்பொழுது நமது சிமெந்து சுயதேவையைப் பூர்த்திசெய்துகொண்டிருக்கலாம். காங்கேசன்துறை துறைமுக விஷயத்திலும் பாரபட்சம்காட்டப்பட்டது [illegible] இந்த அரசாங்கம் இந்த அபிவிருத்தி வேலைகளையெல்லாம் மேற்கொண்டுள்ளது.

இந்த அரசாங்கம் விவசாயத்திலேயே முக்கிய அக்கறைகொண்டிருக்கின்றது. அரசாங்கத்தின் பதவிக்காலம் முடியும்போது அதன் பலனை அறிந்துகொள்ளலாமென்று கூறினார்.

---

## தனியார் டியூட்டோரியல்கள்: பொலிஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் 'டியூட்டோரியல்'களைப் பற்றிய பூரண அறிக்கையொன்றை வடபகுதி பொலிஸ் சுப்ரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் பொலிஸாரிடம் கோரியுள்ளார். இங்குள்ள பல 'டியூட்டோரியல்'கள் பற்றி அவருக்குக் கிடைத்துள்ள பல புகார்களைத்தொடர்ந்தேபொலிஸ் அதிபர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி புகட்டும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட பல டியூட்டோரியல்களில் ஒழுங்கினம். சந்தேகத்துக்கிடமான பல சம்பவங்களும் நடைபெறுவதாகப் பொலிஸ் சுப்ரிண்டனுக்குக் கிடைத்துள்ள புகார்களிலிருந்து தெரியவந்துள்ளதாம் டியூட்டோரியல்களின் பெயர்கள், அங்கு கல்வி பயிலும் மாணவர்களின் பெயர்ப்பட்டியல்கள், தொகை, வகுப்பு நடைபெறும் நேரம் போன்ற பூரண விபரங்களையும் பொலிஸ் சுப்ரிண்டன் பொலிசாரிடம் கோரியுள்ளார். சந்தேகத்துக்கிடமான நடவடிக்கைகள் நடைபெறுவதாக எந்த டியூட்டோரியலிலாவது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் மீது வேண்டிய சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படுமென பொலிஸ் சுப்ரிண்டன் இதுபற்றிக் குறிப்பிடுகையில் நமது நிருபரிடம் தெரிவித்தார். [நி.நி.]

---

காங்கேசன்துறைப் பட்டினசபையை

## நகரசபை ஆக்குவதற்கு ஆதரவும் எதிர்ப்பும்

### தனிநபர் கமிஷன் நியமனம்

காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறை பட்டினசபையை நகரசபை அந்தஸ்துக்கு உயர்த்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி விசாரிப்பதற்காக அரசாங்கம் தனிநபர் கமிஷன் ஒன்றை நியமித்துள்ளது.

டின சபையை நகரசபை அந்தஸ்துக்கு உயர்த்துவதற்கான தனிநபர் கமிஷனரான திரு. இராஜதுரை இம்மாதம் 18-ம் திகதியன்று இதுபற்றி ஓர் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தவிருக்கிறார். காங்கேசன்துறைப் பொதுமக்கள் தமது கருத்துக்களை இம்மாதம் 30-ம் திகதிக்கு முன்னதாக கமிஷனருக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

---

## இளமபெண் படுகாயம

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற மோட்டார் விபத்தொன்றில் சிக்கிய 18 வயது இளம்பெண்ணான மனோன்மணி என்பவர் படுகாயங்களுக்குள்ளானார். இச்சம்பவம் ஆனைக்கோட்டையில் நடைபெற்றதாக அறியப்படுகிறது.

படுகாயங்களுக்குள்ளான மனோன்மணி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். நெசவுக்குச் சென்றுவிட்டு வீடுதிரும்புகையிலேயே இச்சம்பவம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக ஆனைக்கோட்டை பொலிஸார் புலன்விசாரணை செய்துவருகின்றனர். (ந. நி)

---

## தாய்மொழியும் ஆங்கிலமும்

### நெடுஞ்செழியன் கருத்து

சென்னை, ஜூலை 16

கல்லூரிப் படிப்பு உட்பட சகல கட்டங்களிலும் மாணவர்கள் தமது தாய்மொழியிலேயே போதிக்கப்படவேண்டும் என்று தமிழகக் கல்வி மந்திரி திரு. ஆர். நெடுஞ்செழியன், நேற்று சென்னையின் ஒரு மாணவர் மன்றக் கூட்டத்தில் பேசுகையில் வலியுறுத்தினார்?

ஆனால், ஆங்கிலத்தின் அவசியத்தையும் அவர் மாணவர்க்கு எடுத்துரைத்தார். 3ம் வகுப்பிலிருந்து 11ம் வகுப்புவரை, மாணவர்களுக்கு ஆங்கிலம் போதிக்கப்படவேண்டும் என்றார் அவர்.

---

யாழ். ஆயுர்வேத

## வைத்தியசாலையில் மருந்து தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள ஆயுர்வேத வைத்திய சாலையில் சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

தினமும் நோயாளிகள் பல மணிநேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும், அங்குள்ள ஒரே ஒரு வைத்தியரால், நிலைமையைச் சமாளிக்க முடியாமலிருப்பதாகவும் கூறப்படுகிறது. [அ. நி]

---

## உலக அழகி

நியுயோர்க், ஜூலை 16

1967-ம் ஆண்டு உலக அழகியாக அமெரிக்காவைச் சேர்ந்த சில்வியா லூசி ஹிச்கொக் என்ற பெண் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார். இந்த அழகிப் போட்டியில் 56 நாடுகளைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டனர்.

---

## ஆபாசம் என்றால் என்ன?

திருச்சி, ஜூலை 16

ஆபாசம் என்றால் என்ன என்பதை வரையறுக்கத் தமிழக அரசு ஒரு கமிட்டியை நியமிக்கப்போவதாக ஹரிஜனநல மந்திரி டாக்டர் சத்தியவாணிமுத்து திருச்சியில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

ஆபாச சினிமாச் சுவரொட்டிகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்க அரசாங்கத்துக்கு உதவவே இக்கமிட்டி நியமிக்கப்படுகிறது.

---

## கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், திங்கள்

பாஷையூர் பஸ்ஸுக்குள் கண்டெடுக்கப்பட்டகூப்பன் கரையூரைச் சேர்ந்த திரு. சி. சிந்தாத்துரையால் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் உரிய அத்தாட்சிகளுடன் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

---

## படகு விபத்தில் 100 பேர் பலி

ராவல்பிண்டி, ஜூலை 16

லாயல்பூருக்கருகில் ரவி நதியில் ஒரு படகு கவிழ்ந்து 100 பேர் மூழ்கிவிட்டனர். நதியின் நடுவில் அப் படகு கவிழ்ந்தது.

அப்படகில் மொத்தம் 135 பேர் சென்றனர். 35 பேர் காப்பாற்றப் பட்டனர்.

---

மட்டக்களப்பு செய்திகள்

## இருளில் மட்டுநகர்; மேயர் ஒளியேற்றினார்

மட்டக்களப்பு, திங்கள்

மட்டக்களப்பு மாநகர சபை உருவாகியபின்நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் தடவையாக மட்டக்களப்பு இருளில் மூழ்கியது.

மட்டக்களப்பு மேயர் திரு. இராசதுரை உடனடியாக மின்சார இலாகாவுடன் தொடர்பு கொண்டு மட்டுநகர் ஒளிபெற நடவடிக்கை எடுத்தார்.

மட்டக்களப்பு மீன்வியாபாரிகளை சந்தித்து அவர்களை நோக்கியுள்ள கஷ்டங்களை, மேயர். இராசதுரை நேரடியாக அறிந்துகொண்டார். அவர்கள் மத்தியில் மேயர் பேசும்போது ''உங்கள் கஷ்டங்களை அறிவேன். விரைவில் அவற்றை நீக்க நடவடிக்கை எடுப்பேன்'' என்றுகூறினார்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்தில் நகர மத்தியில் வேரோடு சரிந்து வீழ்ந்துபொதுமக்களின் போக்குவரத்திற்குக் கஷ்டத்தைக் கொடுத்து வந்த பெரியஆலமரம் இப்போது துண்டாடப் பட்டு அகற்றப்பட்டு வருகிறது.

பாம்புகள் குடிகொண்டுள்ள இந்த ஆலமரக் கிளைகளில் பாடசாலை சிறுவர்கள் ஏறி விளையாடுவதில் அவர்களுக்கு ஆபத்துநேரிடுமெனக் கருதி மேயர் இந்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

---

### மோதுண்டவர் மரணம்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

மானதாகவும் பொலிசார் நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது. காங்கேசன்துறை பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். இது சம்பந்தமாக மரணவிசாரணை நடைபெறுகின்றது. [ந.நி.]

### சிங்கப்பூருக்கு . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

த்து இப்பொழுது சிங்கப்பூரில் வசிக்கும் ஒருவருக்கு ஒரு மண்வெட்டி கிடைத்துள்ளது. அவர்முன்புஇங்கு வசித்தகாலத்தில் சங்கத்தில் அங்கத்தவராகச் சேர்ந்து பங்குப்பணம் கட்டியுள்ளார். இவருடைய மண்வெட்டி வழங்கும் விஷயத்தில் நிர்வாகிகள்மிகவும் சிக்கலுக்குள்ளாகி யிருக்கின்றனர். இவரது மண்வெட்டியைப் பெறுவதற்கு, இவரது உறவினர்களில்சிலர் உரிமை கோரி மனுச்செய்துள்ளனராம்.

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால்யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு ஜூலை மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org